V. M. Medical Series. No. 1

உ

கணபதிதுணை.

S·477

தேரையர் அருளிச்செய்த

# மருத்துப்பாரதம்.

(மூலம்.)

சென்னை,

வேல்முருகன் வயித்திய சங்கத்தார்

வேண்டுகோளின்படி

இஃது.

கன்னிகைப்பேர்-சபாபதி முதலியார்

புத்திரராகிய

க. ச. முருகேச முதலியாரால்

பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து

---

சென்னை,

விஜயவிகடன் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு—காப்பி 1000.

1909.

இதன் விலை அணா 10 ] [ வி. பி. சார்ஜ் அணா 2.

Registered Copy Right.

L. N. V. PRESS, CHOOLAI MADRAS.

# விளம்பரம்.

இதனால் சகலயான பேர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், தேரையர் 'மருத்துப்பாரதம்' என்னும் இக்கிரந்தத்தை 1867ஸு-த்திய 25-வது ஆக்ட், 20-வது பிரிவின், 9-வது விதிப்படி, காபிரையிட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதால் இதனை எவ்வித மாறுபாடாகினுஞ்செய்து அச்சிட்டு வெளிப்படுத்தினால் அதனாலுண்டாகும் நஷ்டத்தை கோர்ட்டின் மூலமாய் வசூல் செய்யப்படும்.—பிரஞ்சு இலாக்காவாகிய புதுச்சேரியிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

இங்ஙனம்,

☞ க. ச. முருகேச முதலியார்.

| | | | | |
|---|---|---|---|---|
| தேரையர் மருத்துப்பாரதம் | கிளேஸ் | 0 | 10 | 0 |
| அகத்தியர் வயித்திய கும்மி | ,, | 0 | 1 | 0 |
| அகத்தியர்விஷப்பிரதி விஷம், நஞ்சுமுறிவைந்து விசேஷக்குறிப்புடன் ஒரே புத்தகம் | ,, | 0 | 4 | 0 |
| விஜயவிகடன் பத்திரிகை வருட சந்தா வி. பி, பிரத்தியேகம் | | 2 | 0 | 0 |

இவை கிடைக்குமிடம்.

மானேஜர்:—வேல்முருகன் மேடிகல் ஹால்

சூளை, சென்னை

மானேஜர் விஜயவிகடன் ஆபீஸ்.

இராயபுரம் கல்மண்டபம் ரோட், சென்னை.

# அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| முகவுரை | 1—6 |
| பாயிரம் | 8—11 |
| ஆதிபர்வம் | 12—18 |
| சபாபர்வம் | 19—28 |
| ஆரணியபர்வம் | 29—37 |
| விராடபர்வம் | 37—44 |
| உத்தியோகபர்வம் | 45—57 |
| வீட்டுமபர்வம் | 58—69 |
| துரோணபர்வம் | 70—80 |
| கர்னபர்வம் | 80—89 |
| சல்லியபர்வம் | 90—98 |
| கதாபர்வம் | 99—108 |

உ

ஓம் கணபதயே நம:

ஸ்ரீ சிவசுப்ரமணியர் துணை.

# முகவுரை.

## ஆயுள்வேதம்.

சச்சிதானந்த சொரூபராகிய சகல புவன கர்த்தாவானவர் தம்மால் சிருட்டிக்கப்பட்ட ஆன்மகோடிக ளிடத்தில் வைத்த பெருங்கருணையால் அவர்கட்குற்பவமாம் பிணி விலக்கத்தின்பொருட்டு அருளிச்செய்த உபவேதத்திலொன்றே ஆயுள்வேதமெனக் கூறப்படுகிறது.

## தேரையர் நூற்பெருமை.

இவ்வேதத்தின் சாராம்சங்களை இந்து தேசமென்று வழங்கும் இப்பரதகண்டத்திலே யவ்வப்போதுதித்த இருடிகள், சித்த புருடர்கள் முதலியமகான்கள் இத்தேயத்தில் வழங்கும் பற்பல பாஷைகளிலே யெண்ணிறந்த வைத்தியக் கிரந்தங்களின் வாயிலாக வெடுத்தோதினரெனினும், இக் கலியுகத்தில், செல்லுக்கிரையானவைகள் நீங்கலாக, தற்காலம் திராவிட பாஷாதிகாரிகளுக் குபயோகமாம்பொருட்டுள்ள சாத்திரங்க ளனேகவற்றுள், தருமசௌமியர் சீடராக விளங்

கிய தெய்வபண்டித சிகாமணியாகிய தேரையமாமுனி வராலியற்றப்பட்ட நூற்கள் மிக சிலாக்கியமும் மேன்மையுமுள்ள தென்றும் மேனுமிக்கலியுகத்தில் இவர் வாகடசாத்திரம், புள்ளிருக்கும் வேளூர் வயித்தீச்சுரரின் பிரபல்லிய மகிமையை யொக்குஞ் சிறப்புடைத்தாமென்று அடியிற் காட்டிய வுதாரணத்தால் நன்கு விளங்கும்—

"தாதுவினுடைபண்டிதர்க்குக்கணிதர்க்கெய்
தாதுவினுடியெய்திற்சத்தியமாங்—தாதுவினு
கும்பரமர்நந்திகுமரர்தங்வந்திரி
கும்பரமர்தேரர்சித்திக்கும்."

## தேரையர் நூற்றிருகுப்பு.

"சிகாமணிவெண்பாநிகண்டுசேகரப்பா
தேரையர்காப்பியந்தருநாடகமந்தாதி
மிகாவண்ணம்நாண்மாலையமகவெண்பா
விளங்கெதுகைப்பாயிவையெல்லோருமெச்சு
மகாமகிமைக்கரீசலெனுமுறையீராறும்
வேதாந்தசித்தாந்தவயித்தியவாத
முகாதியினுமகைபாகவிரிவுள்வேத
வுத்தமமாய்விளங்குமிஃதுண்மைதானே."

என்பதால் இவர் செய்துள சாத்திரங்கள் பன்னிரண்டென சிலர் கருதியபோதும் மேற்காட்டிய நூற்கள் தவிர, மகாகுணபாடம், தினக்கிரமாலங்காரம், பிரதான குண மூலித்தரு, சிகிச்சைக் கிரமம், வயித்திய பள்ளு நாடகம், மருத்துப்பாரத நாடகம், முதலிய இன்னுஞ்சில சாத்திரங்களியற்றியனவாயுந் தெரியவருகிறது.

## முகவுரை.



## தேரையர் மருத்துப்பாரத நாடகச்சிறப்பு.

இவைகளுள் "மருத்துப்பாரத நாடகம்" கடை நூலென்றும், இதிற் சொற்கம்பீர மவுசித்தப் பெருமை யமைத்துளதென்றும், மேலுமிதில் வாகட சாத்திர ரகசிய சாராம்சங்களையெல்லா மொருங்குகூட்டி யுலகத்தோருய்யுமாறு அமுர்தமாரி பொழிவதுபோல் தானடைந்துள சிரேஷ்ட பண்டிதத்திறமை யெல்லாங் காட்டினரென்றும், இந்நூலைக் கண்ணுறு மெவருங் கொண்டாடுவார்களென்பதற் கையமில்லை. இஃதுண்மை அடியிற்காட்டிய உதாரணச் செய்யுளானுங் காண்க:—

மருத்துப் பாரத நாடக மிதுதனை மதித்து
விருத்தப் பாவினுந் தருவினு மிராகமேல் விரித்துக்
கருத்துக் கேற்றிடச் செய்தனன் தேரனுங் கஞ்சன்
அருத்த மோர்ந் திடற் சொல்லெலா மவிடத மாமே.

வேறு.

இந்த நூலி லிசைத்த வயித்தியம்
எந்த நூலினு மில்லை யிஃதொன்றே
செந்த மிட்டுரைத் தேரச் சிகாமணி
புந்தித் தாமரை பொன்னிக ரானதே.

வேறு.

மொழிந்த மருத்துப் பாரதத்தின்
முறைநாடகத்தி னுரையருத்த
முன்னிச் சிலேடை யிருபொருளும்
முடித்துக்கொள்ளுவார் பண்டிதரே

வழிந்த திருப்பாற் கடலமுதம்
மருந்தானதவு மருந்தாமே
மனத்தா லினத்தா லிதைப்பிரித்து
மருந்துப்புலவர் தமிழ்ப்புலவர்
மொழிந்த மேகச் சம்பரத்தின்
பொருப்பா ருதவ விருப்பாராய்
புணரி சேர்த்துக் கொண்டுமிகப்
பூவா ழுயிர்கட் களிப்பதென
மொழிந்த தேரப் பெருமானு
முதவியாகப் பண்டிதர்க்கிங்
குறுதி மருமந்நூ லுரைத்தா
னென்று மினிமே லுரையானே.

## இந்நூல் வெளிவருதற்குக் காரணம்.

இவ்வரிய சாத்திரத்தை இதுகாறும் வெளியிடாம லதிரகசியமா யொளிக்கப் பட்டிருந்த போதிலும், நமக்குக் கிடைத்த சில ஏட்டுப்பிரதிகளில் ஒன்றைக் கொண்டு மற்றொன்றை சோதித்து எம்மாலியன்றமட்டும் பிழையறப் பரிசோதித்து, ஸ்ரீ சுப்ரமணியர் கிருபாகடாட்சத்தை முன்னிட்டு, ஆயுர்வேதாபி விர்த்தியைக் கோரும் நண்பர்களின் பொருட்டும், சென்னை சூளை வேல்முருகன் தருமவயித்திய சங்கநிதி சகாயத்தின் பொருட்டும், இச்சங்கத்தாரின் பொருளுதவியால், இதை அச்சிட்டுவெளியிடத் துணிந்தேம்.

## ஓர் விண்ணப்பம்.

பண்டித சிரோன்மணிகளே! இதுபோன்ற அரிய விஷயங்களடங்கிய சாத்திரங்களை வெளிப்படுத்த முயல்வதில் திரவிய சகாயங்கிடைத்தல் இக்காலத்தில்

அருமையிலுமருமை மகாவருமையாயிருப்பினு மிதனிலுமருமை; வாகட சாத்திரத்திற மைந்த வயித்திய நண்பர்களி னொற்றுமைக் கிடைத்தலென்பது நம்மனோர்கட்குத் தெரிந்தவிஷயமே. ஆயினும் "எத்தால் வாழலாமெனின் ஏந்தால் வாழலாம்" எனு முதுமொழிக்கிணங்க ஆயுள்வேதாபிவிர்த்தியையும், சீவகாருண்ய முதலிய நன்னடக்கைகளையும் கைப்பற்றி யொழுகும் பண்டிதோத்தமர்கள் இதைக் கண்ணுற்று தங்களாற் லெடுத்தோதக்கூடியபொருள்களையும்; இதிலேதேனும் பிழை நுழைந்துளதேல் அவைகளையு மடியேனுக்குத் தயைசெய்து தெரிவிப்பீர்களாகி லவைகளை யதிவந்தனத்துட னேற்றுக்கொண்டு எம்மிட மின்னூற்குள்ள சிற்றுரையுடன் சேர்த்து இரண்டாவது பதிப்பாக வெளியிடப்படும்.

## மற்றுமோர் வேண்டுதல்.

ஆயுள்வேத நண்பர்களே! தங்களாலியன்ற மட்டும் செல்லுக்கிரையாய் நிற்கும் முன்னோர் வாகடசாத்திரங்களை தயவு செய்வீர்களாகில் அவைகளையும், வேல்முருகன் வயித்திய சங்கத்தில் கிடைக்கக்கூடிய, தேரையர் யமகவிருத்தியுரை, நான்மாலை, அந்தாதி, அகத்தியர் முதலிய சித்தர்களின் பெருநூல் சூத்திரத்திரட்டுகளையும் பிழையறப் பரிசோதித்து வெளிப்படுத்தப்படும். சாத்திரசகாயஞ்செய்யுநண்பர்களுக்கு கைம்மாறுபுரியும்விதம்வேறெமக்குத் தோன்றாமையால் அப்புண்ணியர்களுக்கு மிக்க பேரன்புடன் திரிகரணசுத்தியாய் கோடிவந்தன மளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

## நமது வந்தனம்

அருமையான தேரையர் சாத்திரங்களை சிகரி பகவானுக்கும், சிதலைபகவானுக்கு மாபூதியா யளிக்காமற்படி ஆயுள்வேதபாஸ்கரர் சி. த. சுப்ரமணிய பண்டிதரால் சுத்தப்பிரதியாக வெளியிட்ட "தைலவருக்கச் சுருக்கம்" "நீர்க்குறி நெய்க்குறி" சாத்திரங்களை அவர் பின்னர் அவர் திருக்குமாரர் முத்தையபிள்ளை யவர்களால், புதுப்பித்துப் பதிப்பித்ததற்கும், மோனையமகம், கரிசல் இவைகளுக்கு முன்னோர்செய்த உரைகளை ஒரு வாருகமாற்றி யச்சிட்டு வெளிப்படுத்திய ஹகீம், பா, முகம்மது அப்துல்லாசாயபு அவர்கட்கும், இச்சாத்திரத்தை எட்டுப்பிரதிகளினின்றும் பெயர்த்தெழுதுவதில் விடா முயற்சியுடன் உதவிபுரிந்த எனது நண்பர் எம். தேவாஜிராவ் அவர்கட்கும், ஆலசியமும் அச்சுப்பிழையும் தெரிந்த மட்டிற்கும் நேரிடாமற்படிக்கு அச்சிட்டு வெளிப்படுத்துவதில் உதவிபுரிந்த சென்னை விஜயவிகடன் அச்சாபீசா ரவர்கட்கும் யாம் மனப்பூர்வமா யளிக்கும் வந்தனத்தை யன்புடனேற்குமாறு கோருகிறேம்.

சென்னை, சூளை,
1906ஞ நவம்பர்மீ
30உ

இங்ஙனம்,
கூ. ச. முருகேசன்.

S.477

உ

ஓம்

கணபதியே நம:

ஸ்ரீ சிவசுப்ரமணியர் துணை.



# தேரையமா முனிவரால்

அருளிச்செய்த

# மருத்துப்பாரதம்.

கணபதி துதி.

மலர்தலையுலகுப் பொன்று
மருத்துபா ரதத்தைப் பாடிக்
குலவும்நாடகப்பாராகங்
கூட்டியங் கதைக்கையாட

## மருத்துப்பாரதம்.

வல்லைமுன் னடிமூன்றி
லொன்றிடை முதலா கப்பிங்
கலைசூழ் முனைசௌபாக்கிய
கணபதி காப்புத்தானே.

### ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி துதி.

விருத்தம்

வாதமாய்ப் படைத்துப்பித்த
வன்னியாய்க் காத்துச்சேட்பச்
சீதமாய்த் துடைத்துப் பாரந்
தேகத்திற் குடியாமைந்து
பூதவிந்தியமா மைவர்
பூசைகொண் டவர்பால்விர்து
நாதமாங் கிஷ்ணமூர்த்தி
நமக்கென்றுந் துணையாவாரே.

தரு-துசாவந்தி-அடதாளம்.

சாமி ரக்ஷணை செய்யவே பவனகிஷ்ண
சாமிரக்ஷணை செய்யவே (சாமி)

பூமியா தாரநாட்டை நாடிக்கண்மூன்று
பொருந்திய விக்கிரம பாட்டை
யாமுனர் பிணிக் காட்டை
வெட்டி மருந்தாகிற' கிலைக்கோட்டை
கட்டுவிக்க நேமவல்லாப வீட்டை
நாடினி யுயிர்க் கூட்டை
யேம நிதிய மூட்டை
யாமெய்த விளை யாட்டை (சாமி)

## பலதேவர் நவக்கிரகம் பெரியோர் துதி.

தரு-நாட்டை-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்திரன்முதலிய பெருமிக
பரசாதன ரெவரும்
நந்திமுன்னருளிய மருத்துப்பாரத
நாடகத்தைச் சொலிடவே. (இந்)

சரணங்கள்.

கந்துமெய்வாரியி னுடிகளாம்நதி
கலக்கப்பிணிகுடிகள் பலுக்குமெய்நாட்டினிற்
றந்திரமருத்துவ ராசரீகச்செங்கோல்
சபையினில் நடமிடவே. (இந்)

கந்திபிரதைதிரி கடுகு முப்பலையுப்பு
கடுக்காய் சாதிக்காயேலங் களிப்பாக்கதிமதுரம்
இந்துப்புசீரகங் கடுகுள்ளிவசம்பரி
யிலவங்கமரிசனமே. (இந்)

சுந்தரியரனிரு புதல்வர் வடுகர் வீரர்
அர்க்கியனுமார்சாத்தர் காளிபிட் சாடணர்
நந்திதந்வந்திரி குறுமுனிசித்தர்கள்
நவக்கிரகமிவர் துணையே ஜெய ஜெய. (இந்)

வெண்பா- அவையடக்கம்.

குளவிபுழுவைக் கொணர்ந்துதன்போ லாக்கு
வளமாக வென்புலிய வார்த்தை—யுளபொருளை
நாவலர்தஞ் சொற்போற்செய் நாடகமிதாகையினால்
நாவலர்முன் சொல்லுகிறேன் நான்.

## நூல்

### விருத்தம்.

தீபனவடவை காய்நோய்
திரைமேய்வா ருதியான் மாப்பார்
லேபனப்பைங்கூ ழாநோ
யெதி சினைக் குடிப்பிணிக்கே
நாபனப் புத்திமேரு
தனிலறி வெனுமே ரம்பர்
பாபனமிலா மருத்துப்
பாரத மெழிதி னரே.

### விருத்தம்.

வேதவியாசப்பொருப்பிலருட்சௌபாக்கிய
விக்கினராசன்வரைத்தபடியேவாத
வெப்பினுக்சிரைந்தேநாளதற்குமெந்த
வினைகளுநம்வீடுமிக்குமுநநோய்க்குள்ளாகி
வாதுபுரிதனுவாதத்தினுக்கைந்தேநாளா
மற்றதற்குநோயடங்கிவருத்தஞ்செய்யும்
வருகன்னவினைக்கெல்லாமிரண்டேநாளா
மற்றவையும்மேற்படியேயவைகள்போலாம்
பாதிநாளேநோய்ச்சல்லியங்களுக்கப்
படியேயெல்லாப்பிணியும்விடமித்தொன்றும்
பருவரலாம்வாதசேட்பாந்தத்திற்கும்
பாதிநாளேசரியிப்பதினெட்டேநாள்
காதுமமர்வீடுமர்க்குந்துரோணருக்குங்
கன்னனுக்குஞ்சல்லியற்குங்கதைக்குமுன்னுங்
கர்த்தருக்குள்ளேமற்றபடையுமாரதருங்
காவலருமடங்கிநிற்குங்கணக்குத்தானே.

கொச்சையிற்கயினியர்க் கூடவாங்கொருத்தி
தாமசமெனுந்திரி தராட்டனையீன்றவ
ணேமமாகியதாம் நேத்திரப்பழுதாய்
மற்றவளிராசத வழிபாண்டுமைந்தனைப்
பெற்றனள்சிர்த்தியின் பிரபலமிதெனவே
பண்பெனும்படுவியோர் பகர்சாத்துவிதச்சே
யன்புயர்விதுரனை யளித்தனளப்பால்
முறைமிலாமுறையினின் முக்குணச்சேய்க
ளிரைகையானமைச்சென விருக்குநாள்மேலே
தாமதமாந்திரி தராட்டன்காந்தரியர்
மயக்கத்தைவேட்படாதொன் றூத்தாறுநத்து
[வங்
கன்மேந்திரியந் தானைந்துங்கூட்டியே
புத்திரர்நூறுமோர் புத்திரியொருத்தியும்
என்னமூன்பிறந்துபின்னிட்டாப்பிணிக்கணமாய்
மன்னிமேவளருநாள் மருவிராசதமாம்
பாண்டுஞாபகக்குந்தி பரிவுமாத்திரையைத்
தீண்டிதீண்டாமுனஞ் சேர்குந்திமந்திர
வன்னமார்த்தாண்டனை மருவிட மாச்சரியக்
கன்னனையளித்துயா கன்னிகையாகி
வைகியபின்பாண்டு மன்னருளாலோ
ருரைகரமின்றிமை நன்மந்திரத்தி
லிரண்டுமாத்திரைக்களித் தெஞ்சியமூன்றி
லிரண்டுதீபூதமஞ் ச்ரனபுத்திரரைப்
பெற்றபினைம்பூதப் பிள்ளைகள்வளர்நாள்
வெற்றிசேர்பாண்டுமன் வீட்டினைச்சேரப்
போனபினத்தின புரமெனும்புரத்தைக்
கோனெனுந்தாமதக்குருடன் சேய்நூற்றுடன்

சேர்ந்து நூற்றைந்தெனுஞ்சிறுருடன்பொருக்கா
னீந்துகானின்று நேர்ந்துவீடுமனும்
பிதாமகன் சொல்வழிப் பிரியராங்கிருபர்
சிதமெனவருதுரோணத் தேசிகர்கொடுக்க
கோதறுசுக்கிலக் குருகுலந்தழைக்கவே
யேதமில்கலைக்கல்வி யெல்லாந்திறத்தொடு
கற்றபின்மாச்சர்யக் கன்னனுந்தேயு
நற்றுரைவிசையன் நட்பின்மைபூணவும்
பாவமுன்சுயோதனன் பகருமேற்கன்னனைச்
சிவன்ப்ராகவே சேர்ந்திருந்தனரே.

தரு-பியாகடை-அடதாளம்-

பல்லவி.

இருந்தாரே குமரரெல்லாம் நூற்றைவரா
யிருந்தாரே குமரரெல்லாம்.

அநுபல்லவி.

இருந்தாரத் தினபுரியினிலே வீடுமன்புரி
திருந்துதாமதஞ்சொரிதிரிதராட்டதன்சரி (இரு)

சரணங்கள்.

வாரணபுரியென்னும் வளர்பாதிமெய்தன்னும்
பாரணரசமுன்னும் பரிசனமிகப்பின்னும் (இ)
ஆமயமெனும்வீருய் அரக்குமாளிகைநீராருய்
போமாறனலிபேராய் போற்றியேகிடவேருய் (இ)
ஆலத்திடும்பன்கூற்ற மனுகப்பின்னுடனேற்ற
காவத்திடும்பிபோற்ற கடோர்கஜவளிதோற்ற. (இ)

தாரகமெனுமேக சக்கரபுறத்திற்பாக
தோரணையதுபோகக் கூடியப்பாலேக. (இ)

திண்ணெனுமொருசொலி தருப்பதனருள்வேலி
புண்ணியபாஞ்சாலி புனைமாலையிடக்கோலி. (இ)

விக்கினமெனுங்கோடி வேந்தர்வருக்கமோடி
திக்கிலொளிக்கச்சாடி தினமுடற்பங்கைதேடி. (இ)

இடர்மேலேயிடர்நாட்ட மில்லாமன்னவன்காட்ட
படரானபகையோட்ட பண்பானதொகைகூட்ட (இ)

மந்தரமாகியகாண்ட வனமதைச்சுட்டிசல்பூண்ட
தந்தரவுடனீண்ட தனஞ்செயனெடுத்தாண்ட. (இ)

ஐந்தலைக்குயிரொன்றே யாமெனுமுறைநின்றே
தந்தருப்பதைநன்றேதரப்பகைவினைவென்றே. (இ)

தொல்லைவிற்குருசொன்ன சொற்படியொருவின்ன
நல்லமாதுலன்மன்ன நடத்தினரிவரென்ன. (இ)

தெய்வீகமெனுந்துய்ய தீர்த்தயாத்திரைசெய்ய
மெய்விசையன்பைய மேவச்சிலர்முன்னுய்ய (இ)

காமரென்னுநாக கன்னிவிசையற்காக
தோமில்வலியுமோக சுபத்திரையாசையுமேக (இ)

விருத்தம்.

அத்தினபுரியாமெய்யு ளவையவைப்பதியுளாவிக்
குத்திரவினைகளான குருகுல பதித்துப்பத்தர்
பத்திசேர்பஞ்சபூதப் பாண்டவ ரைவர்தாதை
புத்திசொல்குருநாடென்னும் பூட்கிநாடாள்கின்றுரே;

கண்ணிகள் தரு-சம்பை-.

வாதசுரவீடுமனும் வாதைச்சுயோதனனும்
வாதசன்னியனுசர்களும் வாதகுன்மகன்னனும்
தனுர்வாதசிலேக்குருவும் சன்னியஸ்வத்தாமாவும்
சனிவாதக்கிருபனுமை சனிச்சகுனிதானும்
அதிசாரவிதுரனுமை யாந்தலக்கணமகனும்
மதுமேகச்சயிந்தவனும் வன்னிமந்திரிகளும்
சிதச்சுரதூதர்களும் சிதகுன்மப்படைஞர்களும்
சிதவளிச்சாரணரும் சிதவனற்கோவலரும்
பித்தசுரச்சேனைகளும் பித்தகுன்மவாயிலரும்
பித்தவெப்பக்ஞ்சுகியும் பித்தவளிப்படரும்
மூலவளியீன்றவனும் மூலவெரியீன்றவளும்
மூலசன்னிக்களத்திரமும் மூலமித்திரரும்
பீநசச்சேடியரும் பெரும்பாட்டுச்சிலதியரும்
மீன்வினைத்தொழுத்தையரு மிரைப்படிமையவரும்
நீரிழிவுத்தூதியரும் நீர்க்கட்டுநிமித்திகரும்
நீர்க்கோவைக்காவலரும் நிறைந்தொருமையானர்
கவுரவர்களானவினைக் காரர்பட்சமிதுவேறு
நவில்பாண்டவர்களான நாசவவிழ்தமுங்கேள்
நாடிகுணமிரண்டான நவிலாறுதிறத்தவரு
பீடுவினையுடற்கோட்டை யினத்திலிருந்தாலும்
பிணிகளுக்குட்பகையாகிபெரும்பான்மையவிழ்தங்கட்
கணியுமகநட்பாகி யடர்வதெவ்வாறென்னில்
கவுரவரிருந்தாலுங் காங்கேயன் விதுரன்கிருபன்
தவரக்குருக்களச்சுவத் தாமன்விகன்னன்
இவர்கள்மூவிருவருமுன் னெவ்வாறுபாண்டவர்க்கு
விவரவுள்ளூறவான விவகாரமெனவே
உவமானவுவமேய மொவ்வுமொப்படியுமிது

பவமிலாவியாசரென்னும் பண்டிதர்களறிவார்
கண்ணனெனுங்காயாவுங் காத்தருமனுமரசுங்
திண்ணமிகுவீமனெனுந் திருமாலுங்கியுமே
அருச்சுனனாகியமருதா மாநகுலன்சைவலமுஞ்
சிரத்தையுள்ளநீதி சகாதேவன்நாவலுமே
காளையபிமன்வளியுங் கடோர்க்கஜனாகியபனையும்
பாளைதுருப்பதைக்குமாரர் பஞ்சமூலமுமே
துருப்பதையுத்தாமணியும் சுபத்திரையாம்வழுதலையும்
நருத்திரசித்திராங்கதையலியும் நாகக்கன்னிவணுமையும்
அரவனெனுமிலைக்களியு மானசாத்தகிவனமுங்
துருபதனாகியகணியுங் துட்டத்தியமகிழும்
சிகண்டியெனுங்கொத்தானுஞ் செய்விராடக்களியும்
உகந்தசுவேதனுந்தும்பை உத்திரனுமருகும்
கிட்டினனும்காரீயமும் கிளர்தருமனுமயமும்
இட்டமிகுவீமனெனு மிரதமும்வங்கமுமே
விசையனெனுந்தாம்பிரமும் வீரனகுலனுமெஃகுவும்
இசைகொள்சகாதேவனென்னு மிரசிதமுந்துரிசும்
அபிமனாகியபொன்னு மாங்கடோர்க்கஜதுத்தமு
மிபங்கொள்பாஞ்சாலி மக்களெனுமுப்பைந்தும்
சாத்தகியாநாகமும்பேர் தருசிகண்டியப்பிரகமும்
ஏத்தவுத்திரகுமார னென்னுமிலிங்கமுமே
துருப்பதையாங்கந்தகமுஞ் சுவேதனெனுந்தகரமுமே
லிருக்குமரவானென்ன விசைந்தகாந்தமுமே
கண்ணனன்தாளகமுங் கடோர்க்கஜன்சேயாஞ்சிலையும்
பண்ணுமரமகனென பாஷாணவகையும்
வாயுமகனனநேர் வாளமுங்காண்டீபனென
வேயுநாபியுமபினி யினமுமிசைவாகி
அரியானதிரிகடுகு மரமகனுந்திரிபலையு

மரிமகனும்வெள்ளுளியு மருச்சுனனும்வசம்பும்
நகுலனெனுஞ்சீரகமும் நற்சகாதேவத்துடியு
மிகுமபிமச்சுதகுப்பி விராடனெனுங்கடுகும்
பாஞ்சாலனெனுஞ்சா பத்திரியுந்திட்டத்தூய்ம
னுஞ்சாதிக்காயுமலி யானகுங்குமமும்
கடோர்க்கஜனும்ராட்டமும் நாகச்சிறுவனுமோடியும்;
மடல்கொள்சாத்தகிப்பெருமை யானவிலவங்கமுமே
அடர்துருப்பதைமக்க ளானதாளிசபத்திரி
கடகரோகணிகோட்டங் கடுக்காயதிங்கம்
ஓமமஞ்சள்கசகசாசெ வுள்ளிகோரோசனையீ
தாமெய்சரக்குள்ளதெனு மடர்பரிவாரமுமே
வினைச்சுயோதனனல்முன் வீமன்பொருட்சரக்கி
னினத்தையெல்லாங்கங்கைநதி யென்னுங்கள்ளில்வீ
நஞ்சானகாடியிலும் நாலுவிசைநாலுவிசை [ட்டி
அஞ்சாமலினமறிந் தப்பாலுமேமேல
தீர்த்தயாத்திரையாதி தீர்த்தத்திற்சுசியாகி
ஏற்பாடுவிபரமுத லெல்லாமறிந்தே
தாய்தந்தையெனப்பரிவுஞ் சகலகுணவியாசரெனும்
நேயமிகுமருத்துவத்தின் நிலைமைதெரிந்தவராய்
நோயினன்மெய்க்குருநாட்டை நுவலாயுள்வேதமெனு
நீயநெறியல்லாத செங்கோற்செலுத்தி [ந்
திங்கள்புதன்பொன்வெள்ளி தேசிகரந்தணர்மரபி
செங்கொல்லர்வெட்டுவர்கள் சேகரர்முன்காண
பற்குணனப்பன்காணி பற்குணிமேல்வருகாலம்
நற்குணமென்றவரும் நாட்டிலிருந்தாரே.

ஆதிபர்வம் முற்றிற்று.

# சபாபர்வம்.

விருத்தம்.

தேவியுறப்பாஞ்சாலி மானங்காத்த
சீமூதங்காக்கவவிடதமா மைவர்
காவல்புரிகுருநாட்டி னேயாநூறு
கவுரவர்பான்மயித்திரியாய்க் கலந்துகாண
வேவலராம் மருத்துவரான்மதித்தலோச்ச
லிடித்தலுலர்த்திடுதலிட லெரித்தலந்த
மேவுதலாமெனுஞ்சபையில் ராசசூய
வினைசெய்வார்நிரைமுதல் வந்தனைசெய்வாரே.

தரு-திரிபுடை.

அருமையாகிய பூவைநல்வங்க மணிமுக்கடுகிவை
யானதெய்வத்தைப் பெருமையாகிய மருதநிலமென்று
பேசலாமே

தருமராசனும் வீமசேனனும் சைவசாகியும்
நகுலனுந்ததி தெரிசாதேவனுந் துலையெனுஞ்சபை
சேர்வதானர்

அரசுதாமரை மருதுசைவலம் அறன்பேர்கருத்த
பொன்னிரததாம்பிரம்பரியுமெகுவெள்ளியும்பலம்நேர்
வாளம்பச்சைநாபி

சீரகந்துடி வசம்புவெள்ளுளி சீரையாகியசபையி
லேவல்செய் வாரெனச்செறி யாயுள்வேதிய
ருடன்வந்தாரே

வந்துதமயனே வணங்கியனுசர்கள் மகத்திலுயருமி
ராசசூயமாம் மந்த்ரவயித்திய முயற்சிவினைசெய
மதிக்கின்றாரே

அரசினயமுதற் றருமறைக்கினே யானேயானது
மேற்கொடாரவிந்த விரதவீமனும் மருதநாமிர
விந்திரன்மதலையுமே

பாகியெகுநகு லப்பிரதாபனும் பகருநாவல்வெள்
ளிசாதேவனும் ராசசூயத்துக் கருத்தமீட்டிட
நடந்திட்டாரே

தெற்குவடக்குடன் மேற்குகிட்டிசை திக்கெனுஞ்சதுர்
பக்குவகுண மெற்குநிற்கென நால்வரும்பிரிந்
தேகினாரே

மதித்தலோச்சுத விடித்தலுலர்த்திடல் வசிக்கச்செய்
[திடல்
புதைத்தலெரித்திடல் வஸ்திரபதன்றியெட்டுத்தியோ
வழியதாக [கத்தின்

நாலுபேரின்முன் னவன்தன்சேயொடும்நடக்கமற்றவர்
வடக்குபூர்வக மேலமுத்திசை சென்றுபகையிருள்
வென்றிட்டாரே

முன்னமோதிய பொருள்களாம்பொன்னும் முத்துப்
[பவளமும்
நத்துங்கவடியுங் கன்னலுங்கனியும் பனத்தொடுகண
வேரும் [ப்பும்
விசையநறைமது நேயமளேமுசர் வெண்ணெய்சுதைது
[ப்பு
பண்ணியத்தொடு மிசையப்பூபமி தானபொருள்கொடு
மேவினாரே

தருமநந்தனர் முன்புதுலைச்சபை சாதுரனுசருங்
கொணர்ந்தசெயப்பொருள் வரிசைவரிசைய தானபலவி
வகுக்கின்றாரே [றை

அவரவர்க்குள பலமுநிறையுமெய் யாகிவெளிப்படை
குறிப்பிற்காணவே நவரசத்தொடு மருத்தராம்படர்
நடத்தினாரே

கனகமிரசித மிரும்புதாம்பிரங் காரியஞ்சுதங்
காந்தந்தராவங்கம் மனோசிலைதாளகம் லவணமப்பிரக
மளவுகவடி

மிளகுகணைசுக்கு வசம்புமிலவங்க மெய்மோடியரிதகி
கோட்டஞ்சாதிக்கா யுளிகுடாரிகோ ரோசனைந்துடி
யோமமுதலே

உணவுகடைசிய தானவரசுமு னேடுமேவலாந்
தமர்நிறை கணிதமொருதொடி யிரண்டுமூன்றி
லக்கத்தினலே

சடமுஞ்சத்தமுமெட்டுமொன்பதுந்தசமுமொருநிறை
வகைவகைசரக்களு மடரவரவர விரட்டையொற்றைக
ளாக்கினாரே

ஆனபின்வினை ராசசூயத்தை யயரவேதின
முயலவேவினை யானஞாதியர் சேனையுடன்வர
வனுப்பினாரே

வாதசுரமெனும் வீடுமன்முதல் வாதசேட்பசு
யோதனன்சன்னி வாதத்தம்பியர் கன்னனாகிய
வாதகுன்பமும்

தனுர்வாதத்து ரோணனுமஸ்வத் தாமச்சன்னியும்
சன்னிவாதமாந் தனதகிருபனுஞ் சேட்பசன்னியாஞ்
சகுனிதானும்

நீரினிழிவெனுந் தூதிநீர்க்கட்டு நிமித்திகன்பல்லை
யுக்கிராணத்தன் பாருமோதரத் தலையாரியிவர்
பலரும்வந்தார்

மேககிரந்தி சராசந்தன்முதல் வேற்றுமன்னரும்
ராமகிருஷ்ணர்க ளாகுமிருவங்க மருந்துவருக்சரு
மனுகிறரே

கரும்பொன்னன நரேந்திரசமுகமுங்கதித்தவாதவை
ராசசமுகமும் விரும்பிமருத்துவ ராசசூயத்தின்
வினைசெய்காலை

செந்திதுருப்பதை வாதவைமன்னனைக்கேலிசெய்தது
மயமனுடனவள் விந்தையானதுங் கண்டுளேயிகல் [ம்
விளைந்ததன்றே

வெளிக்குமாத்திர மொருவர்க்கொருவர்கள் விருப்பமிக
[த்தானே
யிருப்பமகமுற்றி யளிக்குமரியாதை பாக்குவெற்றிலை
யாங்கைமுறையால்

கண்ணன்பழம்பகை யானசராசந்தன் கரம்வினைகளுக்
கிகலதாயிகல் கண்ணனுடனுர வீமசேனனைக்
காட்டினனே

காரியத்தினல் வெல்லவரியமே கக்கிரந்தியை
ரசத்தினல்வெல்லுங் காரியத்தினை லோகநாயகன்
காட்டலென்வே

இடும்பிநாயகன் சராசந்தன்தலை யினைத்தரித்தபின்
வினைச்சுயோதனன் கடுங்குரோதமுள் ளடக்கிமேலுக்
களிப்பைக்காட்டி [குக்

அளவளாவியே யொருவர்க்கொருவர்நோ யானகவுரவ
ரவிழ்தப்பாண்டவர் களவும்பிடிப்ப வருளவுமாகவே
கலந்திட்டாரே

தருமநந்தன ரனுக்கையால்வினைத் தந்தைசோதரர்
ஸமந்தர்மித்திரர் குருவெல்லாந்தம தூருக்கேவழி
கொண்டுபோனர்

பின்புகண்ணனு மேகராமனும் பிறிந்துபோனபி
னிருந்தவைவரு முன்புபோனவ லோகநாயக
முறைசெய்தாரே.

விருத்தம்.

கவுரவநோ யினமவிழ்தப் பாண்டுமக்கள்
கன்மருமமறிந்தமனப் பொறுமையாலுந்
தவருதலாம் பொல்லாத காலத்தாலுஞ்
சபையமைத்தோமதுபார்த்து விருந்துமுண்ண
நவமாக வரவென்று வினைத்துதேவ
நாடியது தருமன்முத லானோரெல்லாம்
விவரமிகு மத்தினபுரி யைச்சென்று
மேவின ரவருட னளாவினரே.

தரு-நொண்டி.

கருந்தாதறத்தின்முளை—ரசக்
கான்மகன் செப்பண்டர் கோன்மதலை
எகுவாகிய நகுலன்—வெள்ளி
யென்னுஞ்சகாதேவன்பொன்னபிமன்

துத்தக்கடோர்க்களுனுங்—கெந்தித்
துருப்பதையுஞ்சொல் நெருப்பெனவே
மன்னையவன்மனையைக்—கண்டு
வந்தனைசெய்தனர் தந்திரமாய்
அரசசபையிலேவர்—வைக
வந்தப்புறத்தினில் கெந்திவைக
ஆமாத்தியமன்றயாஞ்—சபை
யாதாரமான சிங்காதனத்தில்
துரியோதனன்வாதக்—சுபத்
துச்சாதசன்னிக் கனிஷ்டனுடன்
குரமானகன்னனெனும்—வாதக்
குன்மஞ்சகுனியையச் சன்னியுமே.
தநுவாதமாந்துரோணர்—அஸ்வத்
தர்மச்சன்னிகிருபநாமச் சன்னிவளி
விதுரவதிசாரமது—மேகச்
சயிந்தவ னனேகப்பொல்லா
சுரக்கிராணிமந்திரிகள்—வினைச்
சுற்றமுந்தூர்ப்பிணி மற்றவரும்
தணவாச்சபைநடுவே—யந்த
தர்மனைவாதவைக்கர்ம மன்னன்
தகப்பனுமகியுந்—தம்பி
தாட்டீகமுந்தோழன்வாட்டிறமும்
மாமன்செய்தந்திரமுங்—கொண்டு
வாதசுரமாம் மூதாதைசொலும்
முனிபஸ்வத்தாமன்—கிருபர்
முன்னவிதுரன் விகன்னனிவர்
சொலும்வார்த்தையுந்தள்ளி—ரசச்
சூதாடவாவென்று வாதாடவே

கர்லகரணஞ்செய்ய—நல்ல
　　கால மென்றம்மான்சொல் வேளையிலே
மதியாகியசரக்கு—குரை
　　மாருதவூழிற்செல் கேரெனவே
தருமக்கடவுள்சுதன்—மிகச்
　　சம்மதமாக சூதின்முயல
சகுனிவினைவலத்தான்—முனஞ்
　　சாற்றுமறமுனைத் தோற்றுவிட
வனமாகியமாதேவ—பல
　　மாட்சியவ்வேளையிற் ருட்சியதாய்
இலமானதுகண்டு—வங்கக்
　　கிட்டினனும்மெச்சும் நெட்டிகல்போய்
அவமானமாமிருப்பை—வளியை
　　யறிந்துகொண்டு வெய்யவினை
கன்னன்சகுனிசொலும்—பொல்லாக்
　　காரியாலோசனை வீரியத்தால்
பாவித்துச்சாதனனார்—கெந்திப்
　　பாஞ்சாலியை யுடலாஞ்சபையில்
கொடுவாவெனவேவ—அவன்
　　கொண்டுவருவதுங் கண்டுசும்மா
காந்தாரியாமூல-வெப்பக்
　　கருமியிருக்கவுந் துர்மகனாந்
துரியோதனன்முன்னே—தம்பி
　　தொட்டிழுத்துவரக்கெட்டவினை
மாபாவிபத்திரியை—யதற்கு
　　வன்னியென்றுஞ் சற்றுமுன்னமைல்
கூறுதவார்த்தையெல்லாங்—கூறிக்
　　கூரையுரியென்று கூறையிலே

அவ்வாறுவாதசன்னி—செய்ய
அக்கினிப்பெண்மானம் விக்கினமாய்
காரீயக்காபாம்பூ—சிலைக்
கண்ணனெனுந்தன நண்ணனேயே
நாராயணாமுறையோ—வென்று
நாடும்முன்னேமிகு மாடைதர
தகவரையெனும்மேக—வண்ணன்
தந்துணையாமுறை தந்துநிறை
புகையாகியபங்க—மின்றிப்
பொன்னெறிக் கண்ணிலானறிவும்
துரியோதனனறிவுக்—தம்பி
தோழனய்மாளிவர் பாழறிவும்
பரியாசமூங்கண்டு—பஞ்ச
பாண்டவர்கோபிக்க வேண்டிமுன்னேன்
அறிவாலடக்கையிலே—சிலை
யாசான் பிதா மகன்பேசுமுன்னோர்
குருடன்முகம்பார்த்து—நடுக்
கூறுகின்றாரைவர் நாடுவிட்டு
வருடம்பனிரெண்டு— வனம்
வைகிமேலக்கியாதம் வைகலொன்று
ஆகப்பதின்மூன்றே—யெல்லை
யாமெனவைவருந் தாமெனவே
சூதிப்பால்வெளிப்படையால்—முன்பு
கூறும்கலை யெல்லாரும் நன்றாய்
அறியச்சதாகதிசெய்—வாத
வையதன்சன்னியாம் வெய்யவர்கள்
துரியோதனனாதி—நூறு
துட்டரையும் நமன் பட்டணத்தில்

சேர்ப்பேனெனவுரைத்தான்—ரவி
சேயைத்தனஞ்செயன் மாயன்போல்
கொல்வேனெனவுரைத்தான்—வஞ்சக்
கோதார்சகுனியைச் சாதேவன்,
மாய்ப்பேனெனவுரைத்தான்—பின்னு
மற்றவரையேருக கொற்றவனும்
கொல்வேனெனவிசைத்தான்—கெந்திக்
கூற்றான துருபதை நூற்றுவரும்
மாண்டானபின்முடிப்பேன்—குழல்
வாரியென்றாள் கவுமாரியைப்போல்
சூளாகுமித்தையெல்லாங்—கேட்டுத்
தூயவர்மேவு மபாயமென்றார்
ஆசாரியர்பாட்ட—னப்ப
னத்தனேபேரு மனத்தமென்றார்
நல்லோர்பெரியோர்கள்—எல்லாம்
நாளைத்தெரியுமிச்சூளிதென்றார்
கருந்தா திறையாதி—யைவர்
காட்சிக்கெல்லாந் தெய்வஞ்சாட்சியென்றார்
நாடாமுறையைவிட்டார்—தொழி
னன்றெனுங்கானத்திற் சென்றனரே
மனையானகந்தகமும்—ரச
மாருதியும்வனஞ்சேருமுன்னே
யினமானநால்வருட—னெதி
யேசத்தருவனவாசத்திலே.

சபாபர்வம் முற்றிற்று.

# ஆரணியபருவம்.

விருத்தம்.

தருமநந்தனன்கான்மதலையிந்திரன்சேய்தருமத் திரகேயர்பாஞ்சாலி, தம்பதியெனும்வாகட்முறைநீங் கிசாலையாங்கானகமேவி, யருமைம்மாதமாம்பரமமூலி கையாலடலைசிந்தூரமாத்திரைநெய், யாக்கிரணத்தூ ளிலேகியம்நசிபமடுபுனல்சூரணங்கலிக்கங், கிருதமை தைலமெண்ணெய்வேதுஞ்சுக்கிலவிரேசனப்பற்று, கிர ணவத்தியொற்றுகற்பகற்காதிகடங் குருகுளிகைசங்கி தையா, மொருமையத்திரங்களாகவுமேலையும்பரைக் கிரீடிகார்த்திடவு, முதவிசெய்தருண்முக்குணநரம்ப தியாவொருமுதலிருபதந்துணையே.

தரு-வருளி-தாளம்-ஆதி.

ஐவருமனையுட னறுவராகியேசாலை
யாரண்யத்தைச்சேர்ந் தார்காரியக்காசை
மைவருதுணையா னபண்டிதன
லூழாங்கைவரிசைக் குளகப்பட்டார்
இந்திரநீலவனச் சாரலிலேயடுத்
தேயிருப்பான்வேளை யிலேபாவகமுனி
தந்திருவருளாலே யிருபதுநாளையிலே
சதுர்விதவோமப்புகை யாலேபற்பமென்கிற

சந்திராக்திரன்தன்னை தருமன்பெற்றான்பின்னும்
தன்மனைப்பாஞ்சாலி யருங்கற்பாலும்
அந்தயோக்கியமுனி யருளால்மேற்படிதானே
யக்கினிகணைபெற்றான் சிந்தூரநாமம்
சுபமுனியருளினன் முன்னேமைப்புகையினாற்
சோடசநாளையி லேமருத்தின்சேய்
சபலமில்லாதபற் பச்சந்திரக்கணை
பெற்றுதன்முனியரு ளாலேவருமேற்படி
அக்னிகணைபெற்றான் சிதாங்கிமுனியரு
ளாலேயிந்திரன்புதல் வன்பஞ்சாக்னியோமம்
பக்கதினத்துக்குள்ளே சந்திரகணைபெற்று
பகர்சலசத்துரு முனிவருளாலே
மேற்படிமேற்படி யக்கினிகணைபெற்றான்
மேலே நகுலராசன்
மார்க்கப்பிரமசாரி முனியருள்வரத்தாலே
வாரத்தினத்துக்குள்ளே சடாக்கினியோமம்
குபேராஸ்திரத்தைப்பெற்றுச் சாம்புபூஷணமுனி
கொடுத்தவரத்தினாலே மேற்படிதானே
நிபமாநெருப்புக்கணை பெற்றான்சகாதேவன்
மேனேரபுஞ்சைமுனி யாலேமுக்கனலோமம்
பதினெட்டுநாளைக்குள்ளே சோமாஸ்திரத்தைப்பெ
பாசமுனிவனாலே மேற்படிதானே [ற்றுப்
கொதிகொளக்கினி கணைபெற்றாள்பாஞ்
சாலிகற்பாங்கோ வணமுனியருளால்
மதியரைக்குள்தரா பதியத்திரம்பெற்று
நாகமுனியாற்சாற்று மேற்படிதானே
முளரிக்கணைபூராய மாகப்பெற்றான்வீம
சேனன்மகனும்புகல் வாமமுனியருளால்

பகலெட்டுக்குள்சசிக் கணைபங்கிமுன்றுற்பெற்று
முண்டகமுனிதன்னுற் மேற்படிதானெய்வர்கள்
நிசக்கணைபெற்றுன் துருப்பதைபின்னரும்
நிறக்குஞ்சிமூக முனியாலுறதிப்பெற்றுள்
வாதேயன்பின்னரு முன்னருரைத்திட்ட
சூள்வார்த்தையைநிறை வேற்நநிற்பன்னமுனியா
தாணுமூலிசரக்கு முதலானமந்திரத் [தரவாலே
தானும்பனியினுலும்
பட்சமிரண்டிற்குள்ளே சிற்றவைபேரான
பூபதிசிந்தா மணிரெண்டுபடைத்தானே
லட்சணமாகப்பின்பு விசையன்பகையைவெல்ல
நன்றுயாலோசனை செய்தேபரமசிவன்
வெற்றியைபூஷணத்தைத் தன்றந்தைக்காணியை
மேவுதன்காணி யாட்சிமுதலாம்பொருள்
மற்றுமுண்டானபொரு ளெல்லாத்தையுங்கைலை
மலையானுக்கர்ப்பிதஞ் செய்துஆமூர்த்தகண்ட
முனியருளுந்தமை யன்கனியருளுங்
கொடுபோய்முக்கணனெடு பொருதிவேடனுமவ்
வனையுருதெரிசித்தங் கவனுலருளுகிற [ன்
மாரவுத்திரா காரக்கணத்திநாமம்
ஆகியபாசுபத வத்திரம்பெற்றுத்
துரோணரருளும்பிரம சரமாமணிமாத்திரை
வேகமுறைசரத்தைவிடவுங் கட்டவுங்கேட்டு
மீண்டுவருமப்போது
பார்த்தன்சிவன்கையிலே பாசுபதம்பெற்றதும்
படைத்ததும்பிரம சரம்மகவான்கேட்டு
மூர்த்திகரமாய்த்தன்னு ரதனைக்கார்த்திகலே[விமன்
வெல்லமுன்கொண்டழைக்கு முன்னேபூமியில்

பாஞ்சாலிக்காக வடதிசையோன்பதிக்
கனுகிபதுமமலர் கொணருமுன்சிலவவுணர்
நெஞ்சுவிடவேவென்று மல்லாடுஞ்சடா
சூரன்சிவனைவாங்கி யபின்அனுமானெனும்
முறைமைச்சோதரரான் பாதி வரம்பெற்று
முன்னவனரனைப் பணிந்துசயிந்தவனுந்
திறமையில்லாதமது மேகப்பதிதனைப்பார்
சிலிக்கத்துறத்தி விட்டுப்பகைத்தவாத
சிதச்சுயோதனனே யாதிபாதகக்கும்
பைத்திரணியாங்காரந் தருவன்கொடுபோகச்சே
மேதைத்தமையன்சொல்லான் மீட்டந்தசேட்டனு
[டன்
மேலேமார்க்கண்ட முனிவன்சொல்லுங்கதைகள்
கேட்டாரணியமெல்லாந் திரிந்துகொண்டாடி
மேலேகிரீடிவரவு பார்த்துக்கொண்டிருக்கச்சே
நாட்டமாயிந்திரனது மாதலிதேர்
கடாவநண்ணினன் தனஞ்செயனே.

விருத்தம்.

சுவேதவாகனனை மைந்தனெனுமைந்தனைச்
சொர்க்கமெனுமுத்தமாங்கத்தோன்றலெனுமான்மத
வலாரிதன்பகையான சுவாசமாங்காலகேய
நிவாதகவசத்தவுணர் முப்பத்திமூன்றான
நிகழ்லக்க ரோமாகரை நிமிடத்திலேகொன்று
வேலிச்சரத்தினை னீருக்கியக்காலையே
சவாதுமணவாகைமா லிகைசூடியமராபதி
தன்னிலொருபவனிவந்து சக்கரத்தந்தையுட

னமுதபோசனமுண்டு தந்தைமகிழ்ந்தவேளை
துவாதசாதித்தரென வொளிருமணிமவுலிபணி
சொன்னவம்பரமுமுதவிச் சோதிக்கம்வேரம்பை
மாதைப்பணிக்க வவள்சொல்லலியுமாயினனே.

## தரு-மிகுமழை.

அவிவடிவொருவேளை யினிமேலாகட்டென்று
  விசையன்பெண்போ கட்டென்றுமேல்
தகப்பனார்தனக்கரு ளும்வெகுமதிநா
  ளகமாத்திரைகிஷ்ணவா ளாயுதமும்
மந்திராக்கினி முனிவன்தினம்பத்து
  வகையென்றருளிய தொகையுடனே
சந்தனுகித்தயி லக்கரோடிகைச்
  சச்சிதானந்தவுர வச்சிரகபாய்
முதன்மைநாலேனை மூன்றுதகச்சித்திர
  முனிகிருதமுனிகந்த முனியுடனே
மாலூரமேற் படியேயானாலும்
  வரமுனிபரமுனி யருளுடனே
ஆரக்குவதமேற் படியேயானாலு
  பஃருணமுனிவனருள் பொருளுடனே
சங்குமேற்படி யேயானாலுஞ்
  சகத்திரமுனியருள் மகத்துவமும்
ஆமலகமேற் படியேயானாலு
  மருக்கமுனியருள் வருக்குடனே
சுகந்தா திநாமக்க பாய்மேற்படிசொல்லு
  முனிபுல்லமுனி வல்லமையுமே
சுகபிசவபி தானவரைச்சட்டை
  துளவழைமுனிவர் வளமையுடன்

விடமுட்டியிருப்புக்க பரயெட்டிநிம்ப
வெனுமுனிவரருள் காணவுடனே
வில்வாதிலே கியமெனுமுடைவாள்
விறல்முனிதான்மிகு திறனுடனே
விசையபலாதி கிருதபரிமளமே
தருவதானமுனி யாதரவுடனே
இலவங்கமேற் படியேயானு
மேலமுனிநாலுதின மேகமுடனே
சர்வோத்தமாதியெனுமுடம்பிலிடி
தனக்குயேற்படியெனும் பனைக்கமுகு
இலந்தைகுளஞ்சி முனிவர்தமதருளெப்
படியும்வேணுமெனவப் படிதானும்
இஞ்சிரசாயன மாஞ்சுரிகைபுமிசை
திரிகடுதான வசைமுனிவர்
தஞ்சமுடனேவிசை யகிருதமுனிவர்
தங்களருங்குலவ விங்கிதமாய்,
கந்தாதிகிருத மெனும்பாங்குக்குக்
கருணைவிசையமுனி யருளுடனே
சர்வச்சங்கிச்சு ரணமாங்கேடைபந்
தனக்குமமுதவல்லி முனித்தயவும்
அர்த்தசந்திரோ தயமாந்தோமர
மதனுக்காடகமுனி மதிகனலே
பூரணசந்திரோ தயமாந்தெண்டினுக்குப்
பூரிமுனிசாம்பிரைதீ வெரிமதியே
மதனகாமேசுர நெய்யெனும்பல்லே
வாளிக்குவித்தக்காரந் தாளிக்கனுமே
மேகாரிநேயமெனு மீட்டுக்குமேருச்
சிலையாரலங்கற்பேர் பெற்றமுனி

உட்டணுதித் திலநெய்நெரிசத்
திற்குள்ளியேரண்ட முள்ளியோரே
அருபானமென்கிற படைக்கினிமேலறப்
பண்ணுவோமென்று மருமத்தை
லங்கணமென்கிற வெல்லையிலக்கிற்கு
நாளௌவுவமித்த வேலையுமே
பத்தியமென்கின்ற நிலைக்குநால்வகைப்
பகருமண்டிலமாதி வகைகளுமே
உணவெனுமனு கரணபடை களுக்
குண்மையாகவேவிதித்த திண்மைகளுமே
உபதையாகியவத் தப்பிரயோக
வுரத்தைநடத்திவைக்குந் தரத்தையுமே
சங்கிதையாகிய வாளியுரைக்கொரு
சருமைஃப்பலகையெனு மருமையுமே
கற்கமெனுங்கே டையத்திற்குளடங்கிற்
கமடலாங்கமெனுஞ் சமதிடமும்
குடிநீராகிஃபஞ்ச சத்தநவகோதை
கட்குமணிமந்திரமூ தண்டையுமே
கல்ப்பமெனுவீர கண்டாமணிக்கிசை
கச்சையெனுங்கடைப்பிடி நிச்சயமுமே
கருப்பொருளெனும் பயிற்சிச்சாக
கரணத்திற்கினமான தரணமுமே
நசியமாகிய வன்னிவாளிக்கு
நமனுக்குநமன்வெற்றி யமையுமென்றே
நாசிகாபரண வளிவாளிக்கு
நாரணியுட்டணிமூல காரணமுமே
வத்திப்புகையெனுந் தூமாத்திரத்திற்கு
மாசைகந்தக்கட்டியிரண் டோசனையுமே

கலிக்கமாம்மோக னுஸ்திரந்தனக்குமுக்
கடுகாதிகாற்பாச முடிவொன்றுமே
அஞ்சனமாந்தம்ப னப்படைக்கிந்திராணி
யாரியபிராமிவிண்டு சோரமெனவே
ஒற்றிடமெனு முடைவாள்கைமல்ல
யுத்தவகைகளுக்கணி மத்தளிப்புமே
பற்றெனும்பிண்டி பாலமல்லகப்
படைக்கிருகைமுறை யடக்கமுமே
வேதெனும்வரு ணக்கினிப்படைக்கிட்டி
வெஞ்சிந்துவாரியரி யஞ்சிந்துமே
சுட்டிகையெனும் பாச்சல்சண்டைக்குத்
துங்கவனலாகிய புங்கமொன்றே
பொடித்திமிரெனு மோச்சசற்சண்டைக்குப்
பொன்னரிதகியுப்பு வன்னியுமே
விரேசனமென்னும் பேதனத்திரத்திற்கு
வேளாண்மையென்னுநேர் வாளாண்மையும்
குருகுளிகைக ளென்றுமிருவகைக்
குவசங்களாக்கிரக வசங்கட்கு
அரியாயுதமிந் திரனுயுதமா
குமெனவேயுரைத்தபேர் கணையுமே
திராவகமெனும் பிழையாச்சத்திக்குத்
திணையொன்றுகணையொன்று பணையொன்றுமே
பின்னுமுள்ளபடைக் கருவியினங்கட்குப்
பேதமும்நாதமுஞ் சேதமுஞ்சொல்லி
படையாகு மிதுகளெல்லா மினிமேல்
படைத்துணைவர்களாயுங் கிடைப்பரென
அனுக்கிரகஞ்செயுந் தந்தைகையிலே
யனுப்பிக்கொண்டடற்சிலைக் குளிப்புடனே

பாரில்வந்தாரன் யத்திற்தமையனைப்
பணிந்துசோதரர்களைப் பணிந்துடனே
நடந்ததெல்லாஞ் சொல்லியைவரு
னண்ணுமொருவனவாசம் பண்ணுமளவில்
பண்டிதனான கண்ணனவிடதப்
பரிட்சைபார்ப்பதுபோலே மருட்சியில்லா
ஐவர்திடச்சத்தி யவர்க்கும்பாஞ்சாலி
யருங்கற்புமெவருக்குந் தெரிந்திடவே
விடப்பொய்கைநீ ராலும்பழத்தாலும்
மிசையுமசனத்தாலும் நிசமாக
அறியாமலறிவித்து வேண்டியதெல்லா
மளிக்கவேயைவருங் களிப்புடனே
விராடமென்கின்ற நாட்டில்மறைந்திருக்க
விரும்பிவனத்தைவிட்டுத் திரும்பினாரே.

ஆரணியபருவம் முற்றிற்று.

# விராடபர்வம்.

விருத்தம்,

மச்சபுற மென்கிற விராடனூர்
மருத்துவ கேந்திரத்தி லக்கியாதவாச
விச்சையினா லறவர்களு மூவிரண்டு
வேடமென வெவ்வேறு ரூபப்பேராய்
கொச்சைவினை வருக்கமெனும் பகைவர்காணக்
கூடாமல் வசிப்பதற்கு பருவம்நாடி
யச்சமில தாகிமுற்று மவிழ்ததேக
மாயினா ரவ்விடத்தி லேகினாரே.

தரு-கல்யாணி-தாளம்-ரூபகம்.

மண்ணினில்பொருமையா கியதன்பேர்க்குவ
    மாஅமான திலேபுட மாமறைந்துதர்ம
னெண்ணினான்சற்றுங்கெருவ மில்லாதகங்குபட்ட
    தியவரசுகிடைத்து விராடனவைநண்ணினான் [வே
திடமானவீமசேனன் வேலைக்குமுன்னியதிற்
    சேர்ந்துவசிக்கமன மொப்பினான்செய்யும்
மடையனானவீமனுக்குக் கமலன் விதிப்படியிம்
    மாற்றமென்றங்கேவந்து செப்பினான்
பற்குணநாட்டியவித்தை கற்குமாதர்க்கியற்றப்
    பரதசாத்திரியாகி மேவினான்தாளத்
திற்கிசைவானரூபி லொளித்துமுன்னலியெனச்
    சபையோரறியத்தானே கூவினான்
நகுலன்வாதுவனென்னச் சுகுணச்சைசவலமாவை
    நடத்துமிடையுடனே வந்தனன்கவர
மகிமைமுட்டாக்கிற்குள்ளே மறைந்துஞ்சமுகநாம
    வசனம்பஞ்சவர்பேரே தந்தனன்
கனிட்டரிற்கனிட்டன் சகாதேவனாவலான்றன்
    காசாவயினேரூபாய்த் தோன்றினான்பசு
வினத்தைரட்சிப்பதான கோவலனைவர்நாம
    மியம்பிமன்னவைதன்னி லூன்றினான்
துருப்பதைகற்பைத்தானே பரிப்ப திலேமறைந்து
    சொல்லுமுத்தாமணியாய்க் கண்டனள் அணி
திருத்தும்வண்ணமகளாய்ப் பொருத்தும்விராடன்
    சேர்வைகொண்டிசைபல விண்டனள் [பாரி
இப்படியாறுபேரு மிப்படியறியாம
    லிருக்கும்மச்சபுறத்தின் வன்னமும்முறை
தப்பிலரசவாயி லடுக்களைதனினிர்த

சாலைமந்திரங்களி லின்னமும்
புரவந்தனிமேலயந்தப் புறத்தினிலேயிருந்து
பூபதிக்கிசைவாகி யோதியும்அந்த
விரையுணவட்டளித்துஞ் சுதைக்காடல்பயிற்றியு
மிவுளிகளைத் திருப்பிக் காதியும்
பெற்றவினமெனவே பெற்றவினமளித்தும்
பெண்ணரசிக்குப்பணி பூட்டியுட்தொழில்
கற்றுமுன்னைவர் வேலைக் காரிவரவளுங்
கன்னிபாஞ்சாலிக்கெனச் சாட்டியும்
கிட்டினவயித்திய னறிட்டாமிதுவெனக்
கெடுவுநாள்வருமட்டு மொன்றியேவினை
யட்டில்லாமற்செய்த வவிழ்தவழக்கமென
வறுவருமுயன்றனர் நன்றியே.

விருத்தம்.

மருந்தெனு மாறுபேருமா றுருபாகி யிவ்வா
றிருந்தன ரிருக்கும்நாளி லிறைவன்மைத்துனரில்மூத்த
கிரந்திப்புண் ணிரணமேகக் கீசகனெனுந்துன்மார்க்க
னருந்ததி யெனும்பாஞ்சாலி யன்னையைக்கண் ணுற்ற
[னே.

தரு-தோடி-தாளம்-ஆதி.

கண்டானே கீசகபாதகன் கனிட்டை வளவினி
லனிட்டமிகவொரு கற்பினுக்கரசை நாசமுறப்படத் த
னக்கேயாசை கொண்டானே—சூதமனுளனைக்குறித்
து மருவிடி லொருப்பரெனவெகு குத்திரங்களையே
சேர்த்து முத்திரஞ் சொல்வானைப் பார்த்து. (1)

பயந்தாளே தீயிடைமேவிய பதைப்பிலோயத்
துருபதப்பெண்ணனவள் பற்றவரவைமுனேடிச் சொற்

றுயருடனேவாடி அயர்ந்தாளே—கேள்வியிலாமழையை யறிந்துமனமிக மறிந்துவரவரி யச்சவிபுதாமுன்பண்டு நச்சுவிடமெனக்கண்டு. (2)

தொழுதாளே தேவாவினுவொடு தாரத்திவருகிற விரக்கமின்மனே துட்டநிருதனென வுட்டுயருடனே அழுதாளே—நாயகமாருதிய றிக்கையாகவே முறைச் சொல்லோவென வப்புறமேலுக்குச்சல்லி யொப்புறவா விக்கச்சொல்லி. (3)

நடந்தானே கீசகநீசனும் நகைத்துநாடி வகைத் துரோபதை நட்புமெய்யனவேயுள்ளி யுட்பகையான லையள்ளி யிடந்தானே—தேடியிராவினே யிரப்பனெனை வது கரப்பனெனவதை யெட்டியதுதனித்தானே விட் டுவசைதொனித்தானே. (4)

அறிந்தானே தாமரைகுதமி தனேத்துமானவ னினேத்தமாதுரு வக்கணமெடுத்தவ்வூரிற் றிக்கெனவடு த்தநேரில் பிரிந்தானே—ராவினிமேலவகை பிரிக்கவட லது தெரிக்கவெகுவிசை பெட்டியரவாகவரு துட்ட னை திராகவொரு. (5)

மனதாசையினல் வருகீசகன் மறுத்திடாமலும் வெறுத்திடாமலும் மட்டிலாவினோதமாக விட்டிடே னெனுதயோகம் உளதாமெனவே—தழுவாமுனம் உ ரைத்தவாய்மொழி யிரைத்தவோசையி லுச்சமாதலா மையெண்ணி யிச்சைநீவியூற்றபண்ணி (6)

உரைத்தானே மாருதிமேலவன் உரத்திலேவழி பிரத்தநீர்தசை யொட்டிரட்டையாகக்கிள்ளி குட்டிநெ ட்டிக்கிழேதள்ளி வதைத்தானே—கீசகனுடுயிர் மரித்

ததம்பிய ரொருத்தரின்றியே வற்கத்தொடுமேகரணம் நிற்கக்கூடாதோர்தரணம். (7)

மாண்டானே கீசகனுனவன் மடிந்தசோதர ருடன்சகோதரி மச்சராஜனுக்குரைக்க துச்சரானவர்க்கிரைக்க நீண்டானே—வீமன்நேரினை நினைக்கநால்வருமுனைக்கமேல்வரு நித்தியப்பெண்ணுனகெந்தி பத்தினிக்கெண்ணுகமுந்தி. (8)

விருத்தம்.

மாமுன கீசகனை துணைவரோடு
மடித்தபின்பு நால்வரன்றி மற்றவூரார்
தேருமல் வீம சேனனைக் கொண்டாடித்
தெரிந்து மிகத் தெரியாமலிருக்குநாளில்
வேமுன குருடன் மகன் முதலாமொன்னுர்
வெளிப்படு நாளைவருக்கு மிதமிதென்றே
யாமுன சாரணராங் குறிகளாலே
யறிகின்ருர் நிமித்தியர்கள் செறிகின்ருரே.

தரு-சௌராட்டகம், தாளம்-ரூபகம்.

ஆரண்யத்திலே சென்ற வைவர் முதல் பாஞ்சாலியும்
பாரரியசம்வச்சரம்பன்னிரெண்டும்மேலேயொன்றும்
செல்லுமுன்னே வெளியானுல்செல்லவேணுமேற்படி
[யே
அல்லவேவாகையினுலேயவர்களைப்பிடித்தோமானுல்
வெற்றிநமதென்றுசொல்லிவினராசவர்க்கமெல்லாம்
ஒன்றியாலோசனைசெய்தேயொருநாள்குறிப்பினுலே

மச்சபுறமென்பதுன்னிமாடுபிடிசண்டைபோலே
எச்சரிக்கைசெய்தோமானுலெப்படியும்வெளியாகும்
என்றுதுரியோதனனுமிளையவனுமங்கர்கோனும்
என்றுமடமேபுரியுமெண்ணமுள்ளசகுனியும்
மந்திராலோசனையென்னும்மந்தவசிரணமுண்டாய்
தந்திரபுளிப்புமீறித்தானைவெப்பமானதிலே
வீடுமர்கிருபர்துரோணர்மீறுமச்சுவத்தாமாவும்
தேடுமன்னனுசருஞ்சேனையுந்தலைவர்களும்
ரதகசமிவுளிகாலாள்நாலுவகையாமுயிர்ப்பும்
உதவமாமுரசமார்ப்பவுத்திரதிசையுமேனுடி
திகைத்தவுன்மத்தசுருத்திகத்தமன்னுடன்சேனை
பகைத்தவைவச்சுதனுர்பக்கத்திசைமேலேவி
மச்சபுரவாதாரத்திலமன்னும்மன்னன்பசுக்களில்
அச்சசீவபரமமானமாவாம்பசுக்கூட்டம்
வெள்ளிநாவலன்காவல்மேவுதெக்கணத்திலே
கொள்ளையுன்மத்தசுரமாங்கொதிகத்தனுரைக்கூவ
கேட்டுமாத்திரகேயனுங்கீசகாரியுந்தாமனும்
நாட்டமாமச்சர்கோனுக்குநண்ணும்படைத்துணையாகி
தென்திசைமேலேநடந்தார்திரிகர்த்தனையேயடர்ந்தார்
வென்றுவிராடனைக்கட்டிமேவுதேரிலேயடக்கி
நிரைகபர்தலுஞ்செய்துநெறியேநடக்கும்போது
வரையைநிகர்மாருதிமறிதிரிகர்த்தனைவென்று
கோனைரட்சனைசெய்துகொண்டுதுணைவர்கொண்டடைட
சேனையுடன்மாருகத்திரும்புமிதற்குமுன்னே
வருமுத்திரதிசைமேல்மாடுமேடக்கவந்த
துரியோதனன்படையைதூதர்சொல்லவேதட்சணம்
ஒருவருமில்லாமையா லோதரசன் மாதுமுதல்
வெருவுதுயருடனும் வேளையிலே மகனும்

உத்தரகுமாரனுமே யோட்டுவேன் வந்தபடையை
சத்தியாயெனதுதேர்க்கு சாரதிமாத்திரம் வேணும்
என்றுதயங்கையிலே பிசைவான வண்ணமகள்
ஒன்றுமருமஞ்சொல்வாளுத்தினைக்குசிட்டைசொல்லு
{ம்
பேடியான்நட்டுவன்பெலமானசாரத்தியம்பண்ண
கோடியெனவேயவனுங்கோடிமகிழ்ச்சியானான்
வலவனுயுத்திரற்குவையநடத்திக்கொண்டு
அலியானசைவசாகியாகவத்திலேவந்தானே
பார்த்தாரொதிரிகளோர்பையவுத்திரன்வார
மூர்த்தன்னியரதவார்ப்பைமுன்னியதிசயித்தார்
வல்வனைபார்த்தாலுருமாத்திரம்நபுஞ்சகனலது
பெலவானிதென்னமோசம்பின்னறிவோமெனநின்றார்
அப்போதுத்திரன்பயமாகியயரக்கண்டு
இப்போதுசாரத்தியமியற்றுநானிகல்செய்வேன்
என்றுங்கேளாமலோட்டமெடுக்கவேபிடித்துத்தேர்
துன்றுபொரியிற்கட்டிச்சுவடுதெரியொட்டாமல்
பேணாச்சொல்லாதகொடைப்பிடகர்வொன்னலவர்கா
[ணத்
தேனைச்சக்கரமாகத்திருப்பினத்தைக்குறித்தான்
குறிப்புவெளிப்படையாகு பெயர்க்குத்தோற்றலென்ன
வெறிக்குமொன்னலர்க்கு விசையனென்பதுகாட்ட
தெய்வசகாயத்தாலேசிலைமுதற்படையெல்லாம்
எய்தவிமைக்குளக்கணையெய்தானேமழைபோல
பாட்டன்குருபுத்திரன்பார்த்தாருள்நகைகொண்டார்
காட்டியசுவத்தாமன்கன்னுவுன்னுவ்வந்தது
சொன்னுலுங்கேளாயேநீசூதனென்பதுமெய்யே

யென்னுமுன்னேபகழியெனுமறிக்காரராலே
வந்தனைகுருமாருக்கும்மந்தாக்னிமைந்தனுக்கும்
தந்துபின்னவருடனேசண்டைசெய்துகொண்டலைப்
[போல
கன்னனையடுத்தடுத்துக்கன்னத்திலறைவதுபோல்
குன்னமாயவன்முதுகுகொடுத்தோடனாலுதிரம்
பாவித்துரியோதனனைப்படுத்தாப்பாடும்படுத்தி
கோவினினந்திருப்பிக்கொண்டுதிரும்பப்பாட்டன்
செருச்செய்யவேமோகனுத்திரத்தையெடுத்தெரிந்து
மருட்சியெல்லார்க்குஞ்செய்துமவுலித்துகில்கவர்ந்து
கொண்டுவாகைபுனைந்தகோவிசையன்செய்ததைக்
கண்டுவெட்கிப்பயந்துகவுரவர்போய்விட்டாரே
பின்புபற்குணன்செயபேரிமுழங்கிவர
வன்புகேட்டுமச்சர்கோமகனுமென்பதுகூறி
தருமனுடன்மல்லாடுதருவாயிற்கெருவித்த
சருமமருமங்கேட்டுக்காண்டீபன்வெகுளத்தேற்றி
யிருக்கவுத்திரன்கதையையெல்லாந்தந்தைக்குறைக்க
கருத்திலச்சங்கொண்டங்கேகைதொழவேயிருந்தார்
பண்டிதனனகண்ணனும்பருவமாச்சுதென்றெண்ணி
கொண்டவிழ்தமெடுக்கக்கும்பிட்டான்பிள்ளையானை
[யே

விராடபர்வம் முற்றிற்று.

# உத்தியோகபருவம்.

விருத்தம்.

நவனீதம்சோரனெனும் மருத்துவன்பாண்
டவமருந்தை நண்ணிநோயாங்
கவுரவரை வெல்வதற் கிதேபருவ
மெனநாடி கைபார்த்தொத்த
துவரையைவிட் டுபலாய நகரமேவி
யுத்தரையைச் சுவர்னமாகு
மபிமனுக்குக் கலியாண மியற்றிநள்ளார்க்
குலூகனையு மனுப்பினனே.

தரு-கேதாரகௌளம்-தாளம்-ஆதி.

சேட்பநாடியு லூகன்குருநாடாந்
தேகத்திலேசந்நி யேகிப்பின் காலச்
சேட்பமானசு யோதனனார்சபை
சேர்ந்து சொன்னதெல்லாந் தேர்ந்துசொல்லி
சம்மதித்திட லின்றிபித்தநாடிச்
சஞ்சயன்வந்து சொல்லுஞ்செயலால்
செம்மையாகவெம் மெண்ணம் பாண்டவர்க்குத்
தெரியும்நீர்போ மென்னவரு மறையோன்
வந்துவிட்டபின் னலந்தமார்க்க
மேவாகானசஞ் சயவே கெனவே
தந்தைமகனறிவை போலேசாற்றிய
துன்மார்க்க வார்த்தையெல்லாம்

நன்றாகவேயுரைக்க வுப
லாவ்யத்திலேவந்து காயக்கமாய்
நின்று வடிதொழுதான் சற்று
நிந்தையில்லாதர்ம நந்தனன்முன்
தாமத குணபித்த சயித்தியத்
தந்தையும் வாதவை மைந்தனுஞ்சொல்
இமைவார்த்தையை ஞானவுபாயத்தாற்
செப்பியசஞ் சயனைப்புலிபோல்
அடிப்பேனென வெழுந்தே நெருப்
பாகியமாருதி போகிமகன்
கொடுப்பேனினி மேலென் கதைக்
கூற்றுவனுக்கினை நூற்றுவரையே
விவகாரத்தின்படியே மண்ணை
விட்டாலாச்சுதில் லாவிட்டா லென்றான்
அவையேநாஞ் சொல்வதென்ற ரினி
யண்ணனுடன்மணி வண்ணனுமே
விடைகொண்டுசஞ்சயனுஞ் சென்று
வேந்தன்பிதாவினுக் காந்தரியாம்
தடையின்றியேயுரைத்தா னவன்
சஞ்சலப்பட்டுடன் சஞ்சயனை
நாளையிதையெல்ல வர்க்குஞ்சொல்ல
ராஜசபைக்குநீ வாசுருக்காய்
மீளவெனவுரைத்தா னவன்மேம்புத்தி
யென்று போ யப்படியே
மறுநாளுதையத்தி லேவந்து
மன்னவர்மன்னவன் மன்னவையோர்
செருவமடங்கச்சொன் னுனதுகேட்டுப்
பிதாமகன் நாட்டமில்லா

மகனுக்குனதுமகன் புத்திமாற்றென்
றுரைத்தா னம்மாற்றத்திலே
பகலோன் மகனெழுந்தான் பஞ்ச
பாண்டவரில்முன்பு காண்டிபனைக்
கொல்வேன்பிறகெல்ல வரையும்நான்
கொல்வனென்று திடஞ் சொல்லயிலே
பொல்லாநிவனென்று குந்தி புத்திரன்
சொல்லவே மித்திரன்சேய்
வெகுண்டான் பனைக்கொடியோனு
மவ்வேளையிலே கொஞ்சநாளையிலே
மிகுந்ததீதென் றெல்லவரு மாசை
விட்டனரேபயப் பட்டனரே
அமைச்சாகியநரம்புஞ் சேட்ப
மானநரம்பெனும் மவுலிக்கே
நமித்திரரதியெனவு லூகன் போல
நம்பியசஞ்சய னும்புரிந்தான்.

## விருத்தம்.

மேலேவாத நாடியறி விதம்போற்
கண்ணன் போரையேந்தி
வாலோசனையுங் குறைநால்வ
ராலோசனையும்பாஞ்சாலி
யாலோசனையு மிரண்டுவழி
யாலுமறிந்து திருவுளத்திற்
கோலாகலமாய்ச் செலத்தேர்மேற்
கொண்டான் வழிமேற் கொண்டானே.

தரு.

சன்னியாசி-தாளம்—ஆதி.

வழிகொண்ட கோவலன் மார்க்கமெல்லா
மிகநடந்து அன்னம்—மயிலென்ன
மாதர்வழங்கிய நாடிவை கடந்து
அத்தினமா நகரத்திலுள் ளாரெதிர்
கொள்ள—அவர் ஆரும்மகிழ்ந்து
வணங்க வுள்ளேசென்று மெள்ள
எங்கும் போகாமலே விதுரனகத்திலே
விருந்து—பொசித் தேகாந்த
மாய்ப்பேசி யிராத்திரிக்கங்கே யேயிருந்து
மற்றநாள் காலமேநாக கேதுசபைக்
கேகி—சொன்ன வார்த்தை யெல்லாஞ்
சொல்லி சாமபேதத் தானமாகி
செஞ்சிமுன் போலவை வர்க்கிடமீயென்று
தந்து—சொல்லிக் கேளாமையாலே
விதுரன்வீட்டிற் பின்னும்வந்து
செய்யவிதுரனைக் கோபத்தினால்வில்லை
யொடித்து—விடச்செய்து
குந்திக்குமுன் மைந்தன் வரலாறுபடித்து
கன்னன் வலுமையை யிந்திரனூற்போக
வோட்டி—பொல்லாக் கண்ணில்லான்
மைந்தன்சபைக் காணமெய் யுருகாட்டி
அஸ்வத் தாமனிடத்தி லனுமானம்
பிறக்க—நந்தியாவட்டத் தானுக்கே
யாவட்டமானது சிறக்க
விடுமர் துரோணர் கிருபரஸ்வத்
தாமர்பணிய—கிருபைமேலிட்
டவர்க்கருள்செய்து விதுரனுக் கணிய

நற்பதமீந் தத்திருபுரி விட்டதைத்
தாண்டி—சிவரட்சணை
தன்னூற்செய் பாண்டவரைக் காணவேண்டி

நேயமாகுமுப லாயத்திலேவந்து
மேவி—அங்கேநிகழ்ந்ததெல்
லாஞ்சொல் லவேபணிந்தார் மலர்தூவி.

---

விருத்தம்.

ஆயுள்வே தியனும்முதல் நரம்புந் தானே
யான கண்ண னேயினங்க ளனைத்துங் கொல்ல
மீயுபர்நன் மருந்துகளா மைவர்க் கோதி
மேல்நடக்கும் பணியுரைத்துத் துவாரகைக்குப்
போயபின்பு தருமன்வரை யோலைத்தூது
போக்கின னதுபார்த்தப் போதுதானே
தேயமன்னரெனுமவிழ்தப் படைத் துணைக்குத்
திருகின்றி யெல்லவரும் வருகின்றாரே.

---

தரு-இராகம்—கெவுளிபந்து-அடதாளம்.

---

காரியமானகண்ணன் கட்டளைப்படியயஞ்
சேருமுலகமென்னச் செருணர்பலமே
கெம்பீரமானநாக கிஷ்ணமூர்த்திக்குத்தானே
தம்பியாகியநாக சாத்தகிவந்தான்
அடாதமனியமெனு மடலபிமனும்வந்தான்
கடலெனவேதுத்தக் கடோர்க்கசன்வந்தான்
அடலைக்குறுதிக்காந்த மாமரவான்வந்தான்
கடிதண்டவாள கடோர்க்கசன்மகன்வந்தான்

பஞ்சலவணமென்னும் பாஞ்சாலிமக்கள்வந்தார்
துஞ்சாசாதிக்காய் துஷ்டத்தூய்மனும்வந்தான்
சாபத்ரியாகியபாஞ் சாலராசனும்வந்தான்
தீபமாமப்பிரகச் சிகண்டியும்வந்தான்
நல்லகோரோசனைவி ராடராசனும்வந்தான்
செல்வத்தகரமான சுவேதனன்வந்தான்
உதவுமிங்குலிகமா முத்திரகுமாரன்வந்தான்
விதமாகியகடுகு விராடமித்திரன்வந்தான்
பெருங்காயச்சராசந்தன் பெற்றகுமாரன்வந்தான்
பரந்தவெங்காயச்சிசு பாலகுமாரன்வந்தான்
தின்னும்பனைவெட்டான சேரபூபதிவந்தான
துன்னும்வேளைவே ரானசோழனும்வந்தான்
பகருநிலவேம்பான பாண்டியராசன்வந்தான்
புகல்தூதுவேளைக் குந்திபோசனும்வந்தான்
ஆனந்தவயிரவபாஞ் சேரன்மகன்வந்தான்
தானந்தச்சுராங்குசச் சோழன்புத்திரன்வந்தான்
கஸ்தூரிமாத்திரைபாங் கவுரியனமகன்வந்தான்
கத்திஞ்சிரசாயனக் கவுசலன்வந்தான்
கிளர்தாளிசச்சூரணக் கேகயராசன்வந்தான்
கிளருவில்வாதி லேகியக்கேரளன்வந்தான்
தகுமானச்சந்தனாதித் தைலப்பூழியன்வந்தான்
அகழ்விடமுட்டித்தைல வரக்கனும்வந்தான்
பண்ணுமிலவங்காதிப் பாண்டவியன்வந்தான்
வண்ணக்கந்தாதிக்கிருத மாத்திரேயன்வந்தான்
படர்நசியங்களான பாண்டவப்படையுட
னிடுநாசிகாபரண யாதவச்சேனையும்
பாகமாம்வத்திப்புகை பாஞ்சாலத்தானையும்
மேகமேயம்பாஞ் சாலமித்திரப்படையும்

குறிகலிக்கங்களான குந்திபோசப்படையும்
மறுமம்பற்றுகளான மாத்திரைப்படையும்
நவிலுமொற்றுகளான ராட்சதச்சேனையும்
பவிவேதுக்கேகயப் படையும்வந்ததுவே.

விருத்தம்.

இங்கிப்படியே நிகழ்கையிலே யிசையத்தினமா
புரிநகரா
மங்கப்பதியிற் சுயோதனக்கா ளையாமரசன்
வாதசுரக்
கங்கைப்புதல்வன் வாதகுன்மக் கன்னன்முதலோர்
மந்திரத்தால்
வெங்கட்செவியான் படைத்துணைக்கு விடுத்தான்தூத
ரடுத்தாரே.

தரு-தோடி-சீருலா-அடதாள்-சாப்பு.

தாமசகுண மாகியதிருத
ராட்டமன்மக னுக்கின்
படித்ததூதுவர் மாநிருபத்தைப்
பார்க்கவேதலை மேற்கொண்டு
அலறுசன்னி வியாதியேமுத
லானசல்லியன் வந்தனன்
தணிந்திடாரண சன்னிபாம்பக
தத்தமன்னவன் வந்தனன்
சதிசெயும்மதி சாரசன்னியாஞ்
சல்லியன்மகன் வந்தனன்

சாதகபல் லக்குணமா கியசல்
லியன்மித்திரன் வந்தனன்
தணலென்னுஞ்சேட்ப சன்னியாகிய
சகுனிமாமனும் வந்தனன்
சன்னிதோஷ விரோதமாகிய
சகுனிமைந்தர்கள் வந்தனர்
கடியகுன்ம பவுத்திரமேனுயெனும்
கன்னபுத்திரர் வந்தனர்
வாதசன்னிவி ரோதமானதுச்
சர்தனத்தம்பி வந்தனன்
விகடவாதசுத்த சன்னியாகிய
விகன்னதுன்முகன் வந்தனர்
உற்றவாதச ணிக்கணத்திரள்
மற்றதம்பிமார் வந்தனர்
சேட்பவேதை வியாதியாகிய
ஞாட்பிலக்கனன் வந்தனன்
வாதைசெய்சுர சேட்டமானது
சாதனன்மகன் வந்தனன்
வெம்புவாதவே தைக்கணப்பெயர்
தம்பிமார்மைந்தர் வந்தனர்
பிரமியத்திமி ரத்தமாவினை
வருணபுத்திரன் வந்தனன்
தொந்தமாமது மேகமாகிய
சிந்துபூபதி வந்தனன்
தரமிகுத்தவ சீரணச்சுர
சோமதத்தனும் வந்தனன்
விகடமாஞ்சுர வேதைமாகலி
விகிதபாற்கவி வந்தனன்

அத்திவெப்பவி யாதிவேதை
மிகுத்தசூரிசிரா வந்தனன்
புலம்புமறகட வெம்மையாகிய
அலம்புசப்பெய ரான்வந்தனன்
மிகுத்தவாதைம கோதரச்சுரச்
சகத்திரப்புயத்தான் வந்தனன்
பகுத்தசோணித மூலமாகிய
திகத்தமன்னவன் வந்தனன்
மத்தபல்லேயி னேய்களாஞ்சம
சத்தகத்தரும் வந்தனர்
கெருலமாகிய வானைக்கால்வளிக்
கிருதபன்மனும் வந்தனன்
கவனமாகிய மாரகச்சனி
யவுனர்மன்னவன் வந்தனன்
அரியசூலை வியாதியாகிய
பெரியசாம்பொசன் வந்தனன்
சூலைகுன்மவி யாதியாகிய
சூலக்கையரக்கன் வந்தனன்
சேருமாசனை சூடியாம்பகா
சூரமைந்தனும் வந்தனன்
மூலமச்சரசன் வந்தனன்கா
மாலைநாஷிதன் வந்தனன்
மாடநேத்திரப் படலேநோய்ரதச்
சோடசாயிரர் வந்தனர்
காதுமாசுர வர்க்கமாகிய
யாதவப்படை வர்க்கமும்
உஷ்ணமாமுக சன்னிவர்க்கமாங்
கிஷ்ணபுத்திரர் வர்க்கமும்

நீர்களின் கட் டுவர்க்கமாகிய
கேரளன்சுதர் வர்க்கமும்
நீர்களினிழி வானநோயெனு
மாரியன்சுதர் வர்க்கமும்
தீரனுக்கன்னக் கிரந்தியாகியக்
கேரளன்படை வர்க்கமும்
நவில்வாதத்தின் விக்கலாகிய
யக்கவுரப்படை வர்க்கமும்
நேரீடும்பிரமை விக்கலாகிய
வாரியன்படை வர்க்கமும்
பங்கமாமுச்சிப் பிளவையாகிய
வங்கர்சேனையின் வர்க்கமும்
துங்கராசப்புண் வருக்கமாகிய
வங்கர்தானையின் வர்க்கமும்
கவடுதான்புரி பீநசப்பிணி
யவுணர்தானையின் வர்க்கமும்
கரப்பான்புண்சொரி சிரங்கதாகிய
வரக்கர்சேனையின் வர்க்கமும்
மிகுத்தானமா ரடைப்பதாகிய
பகதத்தப்படை வர்க்கமும்
தீந்துகுதக வாயுவாகிய
காந்தாரப்படை வர்க்கமும்
மூத்தசன்னிவி ட்ங்களாகிய
மாத்திரப்படை வர்க்கமும்
வட்டமானநெற் றிப்பருப்பிணி
பட்டவர்த்தனர் வர்க்கமும்
விகடநற்றலைப் பருக்களாகிய
மகுடவர்த்தனர் வர்க்கமும்

சித்தியர்கண்ட மாலைநோய்ச்சோம
தத்தர்சேனையின் வர்க்கமும்
நயந்திடாலிங்கப் புற்றதாகிய
சயிந்தவப்படை வர்க்கமும்
வேலைகட்கிணை யாகமீறியே
நாலுதிக்கிலும் வந்ததே.

விருத்தம்.

படையெலாஞ் சேர்ந்தபின்பு
படைத்துணைக் காகநாகக்
கொடியவன் துவரைசேர்ந்துக்
கொண்டல்வண் ணனைவேண்டாமுன்
தடைசெய்து செருந்துணைக்குத்
தனஞ்செயற் கானேனென்றான்
விடைகொண்டு மீண்டான்கண்ணன்
விசையனோ டவன்சென்றானே.

தரு-மோகன-கலியாணி-ஆதிதாளம்.

மீண்டுவந்தப்பாலே மன்னர் மன்னன்
வீடுமன்சொற்படிபின்னர்
சாதேவனாலேநாள்கேட் டரவான்
தன்னைக்களப்பெலியூட்டி
காரியமானதைப்போக்கி யதைக்
காரியனேவர்பங்காக்கி
சேனைக்கதிபதிகெட்டி யென்று
சுவேதனுக்குப்பட்டங்கட்டி

அதிரதரிற்பரந்தாமன்—தானும்
அபிமனருச்சுனவீமன்
மாரதரில்தர்மராசன்—முகில்
வண்ணன் தம்பிகுந்திபோசன்
சிகிண்டியாவான்சராசந்தன்—மகன்
திஷ்டத்தூய்மன்வீமன்மகன்மைந்தன்
சமரதரில்வைகைநாடன்—பாஞ்
சாலிகுமாரர்விராடன்
யாகசேனன்வீமன்பேரன்—மலை
யாளனுத்திரகுமாரன்
அத்தரதரிற்சகதேவன்—அவ
னண்ணன்சிசுபாலனவன்
எஞ்சியமன்னரெல்லாரும்—அந்த
விதத்தினிற்முனேசேரும்
அடைந்ததானைக்கடல்போலே—ஏ
மூட்சேனையானதுமேலே
கவுரவர்கோவிதையறிந்து—வெட்கங்
கொண்டுபாட்டனைச்செறிந்து
சேனைக்கதிபதிநீயே—யென்று
தெண்டனிட்டான்விரைவாயே
அதிரதரிற்பிரமசாரி—தானும்
அஸ்வத்தாமதுரோணசாரி
மாரதரிற்பகதத்தன்—கிருபன்
மாத்திரேயன் சோமதத்தன்
பூரிசிராமன்னர்மன்னன்—சிந்து
பூபன்சகுனிவிகன்னன்
கிருதபன்மாகாம்போசன்—பார்
கிலிராசன்துச்சாதனராசன்

சமரதரில்மற்றதம்பி—மார்கள்
சகத்திரவாகுமுதல்நம்பி
வருணகுமாரனதிகத்தன்—கு
மாரவற்கஞ்சமசத்தன்
அத்தரதரிலேகன்னன்—மலே
யாளத்திறை பொன்னிமன்னன்
எஞ்சியபேர்களெல்லாரு—மருங்கே
யிருக்கட்டென்றுனங்கேசேரும்
சேனைபதிநேரட்சோணி—யென்று
தேர்ந்தாணப்போதங்கோணி
கன்னன்வெகுண்டதுகண்டான்—கங்
கைமகனுங்கதங்கொண்டான்
நாககேறுவந்துபணிந்தான்—கங்கை
மைந்தனுங்கோபந்தணிந்தான்
கன்னன்ஞேனைஞ்சிற்பதித்தான்—உரகக்
கொடியோன் மிகத்துதித்தான்.

உத்தியோகபருவம் முற்றிற்று.

# வீட்டும பருவம்.

விருத்தம்.

மூதனை ளுதயஞ் செய்வதற்கு முன்மெய்க்குருட்சேத்
திரத்திலிலச்
சுதனை ரருளாற் பாண்டவர்கள் தோற்றுமுன்னங்
கவுரவர்பின்
விதமா சேனை யதிரதராம் வேந்தர்நாற்கூற்
றெடுசேனை
பதினை ரட்சோ ணியுமேவிப் பதுமயூகம்
படைத்தாரே.

வேறு.

தருமனைவீமன் அருச்சுனநகுல சாதேவப்
பணியெனநாடி
வருமுறைமூன்றுந் தூதர்முன்னடக்க வயித்தியக்
கண்ணன் கைவரிசை
யிரதமுஞ்செலுத்தி யிரதமுன்னாலே
யேழட்சோணிப்படை யேவிச்
சிரமையான் மயங்கும் விசையனோயினைத்
தேற்றினான்கீதைவாகடத்தால்.

வேறு.

கிரவுஞ்ச யூகமாகக் கிடைத்தபோர்ப் படை
மருந்தாய்ப்
பரவுமை யாதிகட்குப் பண்டுநோ யினனுந்
தெய்வ

விரதனுற் றிடஞ்சொல்வித்து விற்குரு நிலையுங்
காட்டிப்
பொரநின்று னுயுள்வேதப் புண்டரீ
காட்சிதானே.

வேறு.

புவனநா யகனிருந்துங் கவுரவர்முன் பாண்டவர்பின்
போனதென்ன
விவரமெனி னேய்க்கவிழ்த மென்பதன்றி மருந்திற்கு
வினையுமுண்டோ
கவலையுறு நோயாளி முன்னுயுள் வேதியன்பின்
காட்சிபோனேய
அவரவடிப் பதுபோலக் கவுரவநோய் களைக்கொல்லத்
துடங்கினனே.

---

தரு-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

---

கவுரவபாண்டவ சேனைகளானரோ
கங்கள்மருந்துகள் பொங்கிடவீடுமன்
சுவேதனெ திர்வரத் தொந்தவுயித்தியஞ்
செய்தனர்குத்திரமே
மழையெனப் பெய்தனர்—அத்திரமே.

கவுரவர்சேனைக்குக் கத்தன்பேரேவரக்
காதியபோதிற்சு வேதன்பேரேவரத்
தவிடாய்நு றுங்கச்செ யுத்திரகுமாரனை
சல்லியன்கண்டானே
யலறுசந்நி வல்லயங் கொண்டானே.

பாய்ந்ததினுற்கொல்ல மாய்ந்தனனுத்திரன்
பாண்டவர்சயினிய வாண்டவன்வன்னிமேற்
காய்ந்துபொருதிட வாய்ந்தசுவேதனை
காங்கையன்கொன்றானே
ஆட்டுமுன் வேங்கைபோல்—நின்றானே

பாண்டவர்தம்படை மீண்டதுசுற்பன்
படையுமன்றேக வடநிசைமேருவைத்
தாண்டினன் சூரியன் மீண்டான்மறுபடி
தன்னையறிந்திடவே
உலகிருட் கொள்ளை—முறிந்திடவே.

முந்தியநாளினில் வந்தவிசையத்தை
முன்னிவாதசுர சன்னிக்கவுரவர்
தந்திரநாதனை விந்தையாகக்கொண்டு
சண்டைக்குவந்தாரே
சாதிக்காயுநா யுண்டைக்கு—முந்தாரே.

இரண்டாநாட்சண்டைக்குத்திரண்டதளகர்த்தன்
யாகசேனன்பிள்ளை யாகவைத்துக்கொண்டு
புரண்டடர்பாண்டவர் முரண்டெனுகவ
பூமியைக்கண்டாரே
மனதிற் கிஷ்ண சாமியைக்—கொண்டாரே.

மணிமந்திரவவிழ் தத்தோடுபாயநால்
வர்க்கவதிரத வர்க்கம் மகாரதம்
அணியானசமரத வத்தரதமெனும்
அப்படியே யெதிர்த்தார்
கவுரவர் தப்படியே—பிடித்தார்.

ரதகசதுரகப தாதிமேற்சுவாசமும்
நத்துபாரிசவாயு சத்திகுன்மமேலே
பதவலிநோய்த்தள மிதமில்லாமலோடப்
பாண்டவர் வென்றுரே
கவுரவரில் மீண்டவர்—நின்றுரே.

தேராணமாமன்னர் கல்பங்கருப்பொருள்
திட்டவிரேசனஞ் சுட்டிகையானநால்
வீராவேசத்தொடு கவுரவச்சேனையை
வென்றனர் பாண்டவரே
பருதிமேற்பால் சென்றனன் மீண்டனரே.

அன்றைபராத்திரிக் கொன்றிச்சுயோதன
னைரயும்வைதுநீர் போரிடைநாளைக்கு
வென்றிபடைத்திடு மென்றுவிதித்தனன்
வீடுமனுக்கெதிரே
குணதிசை நாடின னர்க்கதிரே.

மூன்றுநாட்சண்டையி லான்றகவுரவ
மூர்த்தன்னியசேனைக்கு மூர்த்தியெதிர்வரத்
தோன்றியபாண்டவ ரிடனணியிற்றிட்ட
தாய்மனும்வந்தானே
யவிடதமாமோ யமனும் வந்தானே.

காங்கையனக்கினிக் காங்கையன்போலாகக்
கல்டுகிரீடிவெ குண்டுபொரும்போது
பாங்குறுசேனையெ லாங்கதிவாயுமுன்
பஞ்செனவோடியதே
கவுரவர்க்கு நெஞ்சமும் வாடியதே.

விடுமன்வாளிபாற் சாடிமுடுக்கிற
வேளையிற்பாண்டவப் பாளையவீரரும்
ஓடி[illegible]ளிப்பது நாடியருச்சுன
னுக்கிரயஞ்செய்தானே
அதிலும்வன்னி விக்கிரமஞ் செய்தானே.

பார்த்தனுமப்போது வேர்த்துத்தன்ரதத்தைப்
பா[illegible]நடனுங்கிருஷ்ண மூர்த்திசைச்சக்கர

பொத்திவரத்தேரை விட்டார்த்துநதிமக
னேங்கிடமுன்குதித்தான்
அதுகண்டு காங்கையனுங் குதித்தான்.

ஆனபின்கவுரவ சேனைமன்னேகவே
யாண்டவர்தன்னொடு பாண்டவர்சேனையும்
போனபின்தாமரைக் கோனேகிமீண்டனன்
போர்க்கிடைவானுரே
கவுரவப் போர்க் கிசைவானுரே.

நாலாநாட்சண்டையில் மாலொடுபாண்டவர்
நசிபங்களாம்படை யிசமானுடன்வர
மேலேகவுரவர் கோலாகலமாக
மீண்டுமலைந்தனரே
எதிரிகள் வேண்டி யுலைந்தனரே.

ஓதுமுன்னேதுரி யோதனன்தம்பிமா
ரொன்பதும்பே ரியமன்பதிசேர்ந்திட
மோதியமாருதி மீதுசுயோதனன்
மூண்டுசெறிந்தானே
பலமில்லாமல் மீண்டு முறிந்தானே.

மாருதிமேற்பின்னும் போரினிற்பாரிச
வாயுவாமானைகள் போயமர்செய்திட
வீராயிரம்பதி னாயிரங்கையா
லெடுத்தெடுத்தெயிரைத்தான்
விசும்பாகிய இடத்தினிலே மறைத்தான்.

மண்டுகவுரவர் தண்டுமுறிந்திட
வாகைகொள்பாண்டவ ரூகமும்மீண்டபின்

சண்டனுமப்போது பண்டுபோன்மேற்றிசை
　　தன்னின் மறைந்தனனே
　குணதிசை பின்னுமுறைந்தனனே.

அஞ்சாநாட்சண்டையில் விஞ்சுகவுரவ
　　ராஜதளத்தொடு தானைக்கிறைவர
மிஞ்சியபாண்டவ ருஞ்சேனைமன்னோடு
　　பேவியழைத்தாரே
　பொருதவரை கூவியழைத்தாரே.

பேரிகையாகிய குக்கிடவாதப்பி
　　தங்கத்துடிநோய் கறங்கக் கவுரவர்
பூரிகையானகாக் காய்வலிநாதிக்கட்
　　போர்க்கணைபங்கெய்தார்
　வில்நீர்க் கோவை யார்ப்பரவஞ்செய்தார்.

பேரிகைச்சூரணம் பூரிகையாங்கிருதம்
　　பேரொலிச்செய்திட சேரலர்சேனைகள்
வீரிடவேதி யடர்மாருதிகையாலே
　　வென்றனர்பாண்டவரே
　முறிந்தோடிச் சென்றனர் மீண்டனரே.

ஆமுனவேளையில் வீமசேனன்கையா
　　லாறுபேர்தம்பிமார் நீறாநீறுகளே
மாமனும்மன்னனுந் தீமெமுகாயுளம்
　　மங்கியழிந்தனனே
　யப்பாலே பதுங்கியொழிந்தனனே.

பாண்டவர்சேனையு மீண்டதுமேற்கடல்
　　பானுவுஞ்சென்றுவந் தானெதிர்கீட்டிசை

மீண்டுபடைக்கிரை வேண்டிரதத்திட
னென்பனரக்கணமே
கவுரவ ரென்னபிணிக்கணமே.

ஆறுநாட்சண்டையில் வீரானபாண்டவ
ராகவபூமியை யேகுமுன்னேபடை
யேறுனவன்படை யேறுனவன்முன்னே
யென்றனனஞ்சினரே
வீமனுக்குத் தோன்றினவெஞ்சினமே.

மன்னவர்மன்னவன் பின்னவர்பத்துபேர்
மாளக்கொன்றுனதை நீளத்திலேகண்டு
மன்னவர்மன்ன னிமைந்தானபி
மன்னுளவாடினனே
கனகரூபன் வென்றனனோடினனே.

வாளபிமன்பினும் பாளையக்காரரை
மாளக்கவுரவர் சேனைக்குளேசென்று
மாளக்கொன்றுனந்த வேளைக்காரத்துசன்
மைந்தனை திர்த்தானே
யடித்தவன்வாய்த் தந்தமுதிர்த்தானே.

சேனைமுறிந்தோடிப் போனகவுரவர்
சேருமுன்பாண்டவ ராறுந்திரும்பினர்
பானுவுமேற்கடற் றுனஞ்செய்தானபின்
பாரினனுமெனவே
கிழக்குக்கடல் விறினனப்பொழுதே.

பாகீரதிமக னாகியசேனை பதிக்கிசைவாகவி
தித்தப்படைத்திரள்

நாகவிமேலாதன னேகவுமாகவும்
நண்ணினரெல்லாரும்
கவுரவவெண்ணின ரெல்லாரும்.

ஏழாநாட்சண்டையி லாழியெனப்படை
யெங்குமிரைத்திடப் பொங்கியபாண்டவர்
நாழிகையொன்றினி லூழியிஃதென
ஞாட்பிடைவந்தனரே
யரக்கன்சண்டை வாட்படைகண்டனரே.

பாவியரக்கனு லாவிபதைத்திடு
பாண்டவர்சேனைக ளாண்டவனைத்தேடிப்
பாவிசுயோதன னாவிகொடுபோக
பந்திக்கவந்தனனே
இடும்பிகேழ்வன் வந்ததைக் கண்டனனே.

அச்சபைப்பத்திலே மெச்சியதம்பிமா
ரஞ்சிபேரைக்கொன்று மிஞ்சியவீமனை
நச்சரவத்துச னச்சியவ்வேளையில்
நண்ணினநேரியன்சேய்
வெகுசண்டை பண்ணினனப்புறமே.

ராசாதிராசனுங் கேசரியாற்சோழ
னந்தனனுமணித் தந்தியிறந்தபின்
கேசரிக்கேதன னாற்றுரியோதனஞ்
கெட்டுமுறிந்தனனே
யவன்படை விட்டுமெறிந்தனனே.

வெஞ்சமரம்விட்டுப் பஞ்சவர்சேனையும்
வென்றியோடவ்விடை சென்றபின்வெய்யவன்

துஞ்சிவிழித்தது போன்றுகடற்கரை
தோன்றினன் கீட்டிசையே
இருளையெல்லாம் மாற்றினனக்கணமே.

கவுரவராகிய பவுரவர்சேனைக்குக்
கத்தனெழுந்துவி கத்தனெழுமுன்னே
நவிலும்வினைப்படை போடுசெருக்களம்
நாடினனத்தினமே
படைத்துணை நாடினரெத்தினமே.

எட்டாநாட்சண்டையில் வட்டமாய்ப்பாண்டவ
ரீண்டியசேனையி லாண்டகைவீமனா
லெட்டுப்பேர்தம்பிமார் பட்டதுகண்டனன்
ராசராசன்தானே
பாட்டாமெத்த மோசமிதென்றானே.

வீடுமனார்குரு நாடனைநோக்கி
விதிசெய்ததென்றுத் துதிசெய்துமேலேநீ
வாடாதேயென்றும னத்திடஞ்சொல்லினன்
மாண்டதுதானைகளே
அரவனாலே யாண்டதறிந்தனனே.

சூலைக்குன்மவினை மோலியரக்கனுங்
துரிதமாய்க்காந்தவ ரவானுமண்டியே
வேலைகள்போற்சண்டை வேலைவிடாமலே
வெம்பியுறுத்தனரே
இருபடையும் பம்பிமறித்ததுவே.

மன்னர்மன்னன்மிக வுன்னியரக்கனை
வந்தனைசெய்திட வுந்திடமாகியே

சென்னிபறிந்தனன் பின்னரரவானும்
சென்றனன்வீரசொர்க்கம்
அவிழ்தங்களை வென்றதுநோயினமே.

பாண்டவர்நொந்தனர் மீண்டதுதந்திரம்
பானுங்கனற்பின் போனகவுரவ
ராண்டுமகிழ்ந்தனர் பாண்டவரிங்கன
யாந்தனரப்பொழுதே
யுசாவி வியந்தனன்மைத்துனனே.

பாற்கரன்கீட்டிசை யேற்குமுன்னேதானே
பாட்டனெழுந்ததுகேட்டு மன்னர்மன்னன்
நாற்கடற்சேனையை மேற்கடமாகவே
ஞாட்பிடைமேவினனே
யெதிரிகண்மேல் வாட்படையேவினனே.

ஒன்பதாநாட்சண்டை யென்பதில்பாண்டவ
ருட்டலைபாதிய திட்டதுய்மன்றனே
மன்பதைநாயகன் பத்திரமென்பது
மாத்திரஞ்சொல்லினனே
செருச்செயகுரு கேத்திரஞ்சென்றனனே.

வெம்பியமாருதி மீதுதுச்சாதனன்
மேவக்கண்டேயவர் கூவக்கண்டப்பாலே
கெம்பீரமானம குடபங்கஞ்செய்து
கீழேபுரட்டினனே
எழுந்தோடவும் வீழமருட்டினனே.

பின்புகடோர்க்கசன் முன்புதன்தம்பியைப்
பின்னப்படுத்திய கொன்னைபரக்கனை

யென்புமுறித்திட மொய்ம்பினிலேபட
வெட்டியுதைத்தனனே
யரக்கனுவி விட்டுபதைத்தனனே.

பார்த்துச்சுயோதனன் வார்த்தையினாலங்கே
பாட்டன்முன்னர்கரங் காட்டியிரங்கவும்
நாட்டமிலான்சேனை மீட்டிரங்கேலென்று
நன்மைகள்சொல்லினனே
சொல்லிப்பேரன்பெய்யைப்புல்லினனே.

நாளையதீயென்ன வேளைப்படையொடு
நண்ணினர்பாண்டவரென்னுடுசென்றனர்
மீள்வுதித்தனன் நாளவிரேசனன்
வேந்தரறிந்தனரே
இருபடையுஞ் சேர்ந்துபிரிந்தனரே.

---

விருத்தம்.

பத்தாநாளுதையத்தில் வீடுமற்கும் பார்த்தனுக்கு
மின்றுமுடி வாமேலில்லை
இத்தோடேசரியென்ன வெண்ணிக்கொண்டே
இருபடையுந் தலைவருமவந் தெதிரேநின்றார்
மத்தானசசடயூ கத்திற்கொக்க மகரயூ
கத்தைவிதித் தடர்ந்தபோது
வித்தாரங்கவுரவரை விசையன்கொன்றான்
வீடுமனும் பாண்டவரைச் சாடினானே.

---

கண்ணிகள்-தரு-உசேனி-அடதாளம்.

---

கவுரவன்சேனையைவிசை யன்காலனெனமடித்தான்
கங்கைமகன்பாண்டவர்தங்கள்படையைமுடித்தான்

பவுரவஷமாய்க் காங்கேயன் பார்த்தனையேலவளைத்தான்
பகழிகளாற் காங்கேயனைப்பற்குணனுந்துளைத்தான்
சைவசாசி யாகமெல்லாஞ் சந்தனுசே யறுத்தான்
சந்தனுசேய்விடுகணையைத்தனஞ்செயனுமறுத்தான்
காண்டீபன் சரமாரி காங்கே யனை மறைக்க
கங்கைமகன் விடுபகழி காண்டீபன் மெய்நிறைக்க
இப்படிய மர்புரியு மெல்லையிலே கண்ண
னேவலினா லேசிகண்டி திட்டத்தூய்ம னண்ணன்
தனை விசையன் முன்னிருத்திச் சமர்புரிய வன்னி
தனுவெடாம லேயிருந்தான் பூருவத்தை யுன்னி
அருச்சுனனப் போதுமதி யரைவாளி யெய்ய
அத்திபிரம சார்யுர வாவினிலே கொய்ய
அக்கணமே வீடுமனு மலறிக்கொண்டு மாய்ந்தான்
ஆவிகொஞ்சமிருக்கையினலம்பணைமேற்சாய்ந்தான்
பொன்னுலக ரெல்லாரும் புட்பமழை சொரிந்தார்
பூவுலகி லெல்லாரும் போற்றிமிகப் பரிந்தார்
சவுரவரும் பாண்டவருங் கண்ணீர்விட்டே யழுதார்
கன்னன்முத லான துணை மன்னவர்கை தொழுதார்
ராசாதி ராசனுக்கு நல்லபுத்தி சொல்லி
நன்பரிவாற் பாண்டவரை யென்புருகப்புல்லி [தான்
அனுப்பினபின் குருக்களுக்கேயணித்தலைமை கொடுத்
அங்கர்பிரா ணதைக்கேட்டே யாசையெல்லாம் விடு
[த்தான்.

வீட்டுமபர்வம் முற்றிற்று.

# துரோணபருவம்.

விருத்தம்.

பதினோரா நாட்சண்டை துரோணர்சேனா பதியானார்
மன்னர்மன்னன் பணிந்து சொல்வான்
நதிமகன்போர் செய்யாம லெனக்குத்தர்ம நந்தனனை
பிடித்தளிப்பா யெனநான் செய்வேன்
சதிசெய்யாருச் சனவீமர் பிரிக்கவீயுஞ் சமசத்தர்
முதலோரை பனித்தியென்றே
யதிரதயா ரதப்படைக ளுடனேனாட்பை
யண்ணினன் சண்டைமிகப் பண்ணினானே

கண்ணிகள்-தரு-பைரவி-ஆதிதாளம்,

சமசத்தக ருடனே யருச்சுன னிமதிக்கு
தன்னிலேகினன்பீமன் பின்னோர்திக்கா னன்பிறகு
ராசாதி ராசனுடன் பேசினபடிதானே நடப்பிக்க
வேணுமென்று துடித்தெழு படைகோனே

தர்மநந்தனன்படை வர்மமாயெதிர்த்திடத்
தனுக்குருபடையைந மனுக்கிரையளித்திட
சவரப்படைக்கிரை காலனைப்போல்வரக்
கண்டுதர்மராசன் கொண்டல்போ லத்திரம்

சொரியவப்பொழுதினிற் பெரியசிலைக்குருவும்
தொந்தயுத்தமாகவே யந்தப்படியே சொரிய

தருமன்வெகுண்டுகுரு தனுவைமுன்னமொடித்தான்
தனுக்குருநிற்காமற் றானேயோட்டம்பிடித்தான்
அருச்சுனனாலதிகத் தன்படையுடன்மாண்டான்
அப்பால்விசயன்சம சத்தரணிமேல் மூண்டான்
தனஞ்சயனாலேசம சத்தரெல்லாமிறந்தார்
சாத்தகியாலே சோம தத்தமித்திரர் பறந்தார்
அடருகிருத பன்மனாலே ராட்சதன்படை
யதமாச்சு அரக்கனாலே யதமாச்சே யவன்படை
சிந்துபதியம்பாலே செத்தானே யரக்கனும்
செய்யபாஞ் சாலிமக்கள் சித்திரக்கணையாலே
மாண்டானே மலைபோல யந்தவவுண ராசன்
மகிமைசேர்தவத்தாலே வரம்பெற்ற காம்போசன்
அப்பாற் குடகடலை யணுகினான் பருதியும்
ஐவர்படைமீண்டது அவர்படையென்னவே
பூருவவேலையிலே போந்தன னாதவன்
போர்க்கெழவைவரைப் புகன்றனன் மாதவன்
கவுரவ சயினியங் கடலென வெழுந்தது
கண்டதுபாண்டவர் கடற்படைதானும்
பன்னிரண்டாநா ளுதயந்தனிலே சேனை
பதியானைப்படி தானைமகரயூக
முன்னிவரக்கவுரவர் பாண்டவருமாங்கே
முனைந்துவந்தாரிரு படையுமுனைப்போர் செய்தார்
தென்னருகுவிசை யனிகற்சேடமான
செருச்செயகாலபக தத்தன்கரிமேற்கொண்டே
துன்றுமுனைக் கொல்வனின்றேயென்றுபோர்க்குத்
துடங்கினான்வீமனுங்கைக யடங்கினானே

## தரு-கண்ணிகள்-தோடி-அடதாளம்.

மத்தமானகசத்திலே—பக
தத்தனன்மை செலுத்தினன்
அத்திரமாரியெனத்தானே—வாயு
புத்திரன் மீது விடுத்தனன்

ஒத்தவீமனுமத்திரம்—பக
தத்தன் மீதிலழுத்தவே
ரூடியென்க்கணைபடிய—மாருதி
முடியிலே படவிட்டனன்

தடையிலாததபடவே—வீமனு
முடலெல்லாநடுக்குற்றனன்
அண்ணனனவன்நண்ண—வேலையிற்
கண்ணனைமனதெண்ணினன்

மனந்தெரிந்துகொண்ட—னந்த
சாமியுந்தனஞ் செயற்கறிவித்தனன்
சுத்தமாய்ச்சமதத்தர்—தம்படை
தணித்தபின் விசையனும்

மைத்துனன்படி வத்தொடும்—பக
தத்தன்முன்புகுதித்தனன்
பித்தமார்பகதத்த—னென்றுக
சத்தைமாளவடித்தனன்

வத்தமாகரிசெத்தபின்—பக
தத்தன்மீறியுறுக்தனன்
காண்டீபன்கணை தூண்டவே—யது
தீண்ட வயவன்மாண்டனன்

தத்துபோல்வருபித்தநோய்ப்—பக
தத்தனுவியொழிந்தபின்
கன்னன்வாளிமெய்மன்னவே—யுயிர்
தென்னர் கோமகன்விட்டனன்
ஓடினன்மகன்சாட—வாவி
விராடமித்திரன் விட்டனன்
மாதுசாதனன்மோதவே—புலிக்
கேதனன்சுதன்மாண்டனன்
இலக்கணன்படைகலக்கவே—குட
மலைக்கணன் மகன்மாய்ந்தனன்
மார்க்கமானகடோர்க்கசன்—கொலத்
தோற்கமாண்டனன் அலம்புசன்
மாருதிப்பெயரோது முத்தமன்—மோது
கைக்கதையடியினுல்
கத்தர்கோனருள்புத்திர—இரு
பத்திரண்டுபேர்செத்தனர்
ஆதவன்குடவோத முந்தின—போ
தொழிந்தனவமர்களே
இருவர்தானையுமேகி—மீண்டன
பிரவிமீண்டனன்கீழ்திசை.

---

விருத்தம்.

பதின்மூன்று நாட்சண்டை யிரண்டுவர்க்கப்
படைகள்வெளிப் படச்சேனு பதிகள் வீரப்
பதினுா யிரக்கஞ்ச ரதரைமாட்டப்
பற்குணன்சென் றுறெரு பாற் பவனன் சேயு

மதிலகன்று னவ்வேளை தருமன்தன்னை யார்க்கவந்தார்
கவுரவர்மற் றபிமன் கண்டே
பிதுசமயங் கவுரவரைக் கொல்வனெனென்
றேறிஞ னிரதமிசை சீறி னனே.

---

தரு.

பல்லவி.

பாய்ந்தானேயபி மன்னுகவுரவர் படையிலே
யிடிபோல யூகமும் யுடைபட

அநுபல்லவி.

மாய்ந்தானே யிலக் கணனுந் துச்சாதனன்
மைந்தனுமோடத்துரை மைந்தரெல்லாரும்
கண்டானே சிலைக் குருவும் அபிமனுங்
கடிந்தானே தொடுந்தனு வொடித்தோடினனே

சரணங்கள்.

எதிர்த்தாரே கன்னன் மக்க ளிரண்டுபே ரிறந்தாரே
யுறந்தானை பறந்துதப்போதே
அங்கர்கோமா னெதிர்த்தானவனையு மடித்தான்வில்
லொடித்தான்பின் பொடித்தானிரதத்தை
அச்சுவதாமன்வந்தா னவன்சிலையறுத்தான்
கொலைமறுத்தான்சொல வெறுத்தானப்பாலே
மத்திரதே யன்வந்தா னவனெடுமலைந்தான்
கைகலந்தான்கைப் பலந்தனைக் குறைத்தான்
பார்த்தானேமன்னர் மன்னன் யினியென்ன
படையெலாமடியுதே தடையென்னசொல்வீர்

அபிமனே யென்று சொல்லவஞ்சனே
யாலே வில்மேலேதேர் காலொடுகையும்
போக்கினு ரப்பாலும் அபிமன்னுபுலி
யென்னவலிசெய்ய யுலவைசேய்கேட்டு
பதினறு பேர்மன்னர் கொண்டுசோதரரைப்
பதைத்திட வதைத்துமேற் கதிக்கவொட்டாமல்
கொன்றை மாலையைப் போட்டுசயிந்தவனேக்
கொல்லெனச் சொல்லமன்ன னல்லதப்படியே
ஆகுதென்றுசிந் துபதியபிமனே யடித்தனன்
முடித்தலே படிக்குளே விழவே.
சேர்ந்தனன்வீர சொர்க்கமபிமன்னு
செங்கதிருங்கடல் தங்கின மறைய
நரனு யிரெண் ணுயிரவெங்கல் ரதத்தரை
வதைத்தபின் மதத்தொடு திருப்பி
வருகிறவிசையனுக்கும் தருமத்தின் மன்னவர்க்கும்
பின்னவர்க்குந் தன்னவர்க்குந் தெரிய
பண்ணிய விசையனேத் தேற்றியப்பாலே
பாடியி லோடியே வாடியபேரை
தேற்றிவியாச ராலேவிசையனேத் தெளிவித்து
வெளிவெற்பின லெளிதினற் கொடுபோய்
பரமசிவனேத் தொழுதுபாசுபதக் கணேயைத்
தொடுவித் ததையுங் காட்டி
வந்து சொன்னசூள் முடிக்கச் சயிந்தவ வதைக்கு
ளமிதத்தை யுமிதத்தொடு சொலவே
பருதியுதையஞ் செய்தா னிரண்டுபடைகளுங்
கடலென வடலுடன் வரவே.

---

விருத்தம்.

பதினேலா நாட்சண்டை யருச்சுனர்க்குப்
பாசுபத நிலையைக்காட்ட கிஷ்ணமூர்த்தி
யதிவேக மாயிரத மூர்ந்துதன்னு ரணியூக
மூன்றில்முன் வில் லாசான் தன்னை
யுதவுநெறியெனச் சமர்செய் தப்பாலேகி
யுருத்துவந்த மித்திரன் சேயுடன் போர்செய்தே
கதமெனவே கைபிற்றனது வில்லினுண்மை காட்டினு
னெதிர்த்தவனை மாட்டினுனே.

---

தரு-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

அருச்சுன னடித்தானே கையிலே
பருத்தவில் பிடித்தானே.

அநுபல்லவி.

அருச்சுன னடித்தானே திரட்படைமடித்தானே
யரிரதமூறவே தரியலர்நேரவே

சரணங்கள்.

யாதவமித்திரப்படை சீதரபுத்திரத்தொடை
யனைத்தையு மாட்டினுனே
கவுரவசனத்தையு மோட்டினுனே.
வருணன் மகனுவியைப் பரித்தானே
மச்சரனென்னும் பாவியைக் குறித்தானே
யவனைக்கொன்றே ஆயிரம் புஜத்தானே

மாயவுந் துணித்தானே யடந்தானே
துரோஷிதனை சிலையினுலேயிடந்தானே

தோஷிதனைபின்னுமப்பாலே யடிக்கிற காற்றென
நடக்கையிலாற்றிலே யண்ணனுந் திரும்பினனே
மாருதி நண்ணினன் விரும்பினனே.

மன்னர் மன்னர் அனுசர்ப னிருவர்கண்
முனமெதிர் வீயவேயரைந்தானே
விரைவாகத்தம்பியை யுரைந்தானே

நிரையாகசாத்தகி யரியன்கையாலே
பூரிசிராவைய்யு மரிந்தானே
பற்குணனும் கெட்ட வாகருச்சொரிந்தானே

நற்குணனும் சயிந்தவனை அலறிமறையுமுனே
கொலுதல் சபதமெனவறிந்தாரே
கவுரவர்கள் அவனையுள்ளே செறிந்தாரே

பவுரவர்கள் நினைக்குமுன்னே யாழியாற் பருதியை
காழிகைத் திரிதிகையடங்கவு மொளித்தானே
சயிந்தவனைத் திடங்கொடு விளித்தானே

சக்கரத்தை யகலச்செய்தான் பகலைச்செய்தான்
விசையனுக்கெதிரி காட்டினனே
சிந்துமன்தலை யினைக்கணை யோட்டினனே

யவன்தந்தை யத்தத்திலாகவே செத்துடன்போகவே
யரசரெலாங்கண்டு அதிசய பரவசமேகொண்டு
மகிமையையரிதென வோதின ரிபவினுமெய்

மாடத்தொடு புரிந்தாரே கவுரவ திடத்தொடு
திரிந்தாரே.

நகுலனாலே அத்திரநேர் சோமதத்தனு மிறந்தான்
அவனுக்கனுசனாலே பார்கலிபுவனத்தை
விட்டான்

மேலேகடுகிய அங்கர்பிரான்விடு வெங்கதிர்வேலினால்
அருங்கடோர் கசனிறந்தான்மாருதி
பெருங்களிப் பினைமறந்தான்

பாண்டவர்க் காரியன்மேல் வருங்காரிய
மோதியே யவர்களைத் தேற்றினனே
சூரியன் உவரியிற்றோற்றினனே. (அரு)

---

## விருத்தம்.

பதினைந்தாநாளுதயர் தன்னிற்சேனா
பதியையர்வத்துவசன் வெருத்தான் மெத்த
வதினாலே சிலைக்குருவு மின்றுதானே
யைவர்படைக்கடலையெல்லா மறுப்பேனென்று
பதுமயூகத் திறேனாடு களத்தில்வந்து
பாண்டவ சேனாபதியைப் பார்த்துவைதுக்
கதிமழைபோல் பாண்டவசே னையையம்பாலே
கவித்திட்டான் பிணக்கிரியாக் குவித்திட்டானே.

---

## தரு-பந்துவராளி-ஆதிதாளம்.

பாஞ்சாலர்சேனையு மாஞ்சுது பேர்பெற்ற
பாண்டவர்சேனையு மாண்டதுமேல்
கேகையசேனையுஞ் சாகையிலேயெதிர்க்
கிட்டியெதிர்த்தனன் துட்டத்தூய்மன்

வேதியனுந்தனு வாதமடிக்கவே
விண்டுதிட்டத்துய் மன்கொண்டெழ
பாஞ்சாலன் பார்ப்பானைக் காணுசெதுத்தானவன்
பட்டான்சிலைக்குரு விட்டவம்பால்
மச்சர்பிரானொரு மிச்செதிர்த்தானவன்
மாண்டான்முனிக்கணை தீண்டுமுன்னே
மத்தகடோர்க்கசன் புத்திரனூர்பகன்
மைந்தனடைந்தா னந்தரமே
சிலைக்குருமகன்விடு கொலைக்கணை யொன்றாலே
செத்தான்கடோர்க்கசன் புத்திரனே
சத்தியதர்மன்கை யத்திரத்தாற்பட்டார்
மத்திரருக்கிரை புத்திரரே
அண்ணலெனத்தகு கண்ணிணைத்தன
னந்தணனைக்கொல்லத் தந்திரமே
மேலுமுனிக்கணர் காலமிதாமென
வேண்டினர்மாரினூல் பூண்டவனை
அச்சுவத்தாம னெனச்சொல்லுமோர்பெரு
மானையிறந்துமுன் போனதுமெய்
மிச்சையல்லாதரு மைச்சுதகூறென
விண்டுசொலச்சொலே விண்டனனே
அத்தொனிகேட்டடர் புத்திரசோபமு
மாகியவேதிய யோகியின்மெய்
திட்டத்துய்மன்கணை தொட்டிடவீழ்ந்தது
சிலைமுனிவன்சிரம் நிலமிசையே
அதுகண்டவனருள் புதல்வன்வெகுளிகொ
டைவரையுங்கொலை செய்வனென
நாரணன்படைவிட நாரணன்மாற்றினன்
ஞாயிறுமேற்கடல் போயதுவே

பன்னகேதன மன்னர்மன்சேனு
பதியினிமேலின்ன புதல்வனெனே
பன்னுமுன்னேவந் தானவன்மெய்யொவென்று
பார்ப்பதுபோலிருள் தீர்ப்பவனே.

துரோணபருவம் முற்றிற்று.

# கர்ண பருவம்.

விருத்தம்.

பதினாறாநா ளுதயத்திற் பகலோன்மகனென்
படைக்கிரையா
யுதவிசெயவே கவுரவர்க ளுருத்தார்மகர யூகமுட
னதிர்செய்சேனைப் பாண்டவர்க ளன்றிலாகப் படை
வகுத்தோ
கதிசேர்குருசேத் திரத்தில்வந்து கடுத்தார்சண்டை
தொடுத்தாரே.

தரு-கண்ணிகள்-வராளி-ஆதிதாளம்.

கவுரவசேனுபதி பவுரஷத்தோடேவரக்
கண்டானே பாண்டவ சேனைக்கதிபதியும்
கன்னக்கிராந்திமுடி மன்னவரொருகோடி
கன்னமூலமாங்கெடி மன்னவரொருகோடி
கன்னப்பருவாகிய தென்னவரொருகோடி
கன்னத்தவடைப்புற்றும் மன்னவரொருகோடி

கன்னச்செவிவலியாம் பின்னவரொருகோடி
கன்னக்குடாரியான வன்னியரொருகோடி
கன்னச்செவிடாகிய துன்னுமராடர்கோடி
கன்னத்தந்தவாயுவாம் வின்னவராடர்கோடி
மண்டைப்பிளவையான மகுடவர்த்தனர்கோடி
மண்டப்பீனிசநோயாம் பட்டவர்த்தனர்கோடி
பாரிசவாயுவான பார்த்திபரொருகோடி
பக்ஷகவாயுவான படைமன்னரொருகோடி
காக்காய்வலியாகிய காவலரொருகோடி
கால்கைபிடிப்பாகிய கன்னடரொருகோடி
அண்டவாயுவாகிய வாரியரொருகோடி
யானைக்கால்வாதமான வவுணர்களொருகோடி
கயநோய்நீர்கட்டுவல்லை காசம்நீரிழிவாங்
கானவரரக்கர் ராசர்களெழுகோடி
ரதகசமாபதாதி நால்மேற்சுவாசமும்
பாரிதவாயுசத்திகுன்ம மிசைந்தகாற்பிடிப்புடன்
முரசக்குக்கிடவாத முழங்கக்கவிகையென்னு
விரசுமுன்மத்தபித்த மீதுகவிருந்துவர
துத்தாரிக்காக்காய்வலி தொனிக்கவாளானபாண்டு
மொத்தவூர்த்தசுவாச மோடிப்பதாகையாட
கேடையவெப்பதாபங் கேசரிபோலேவரக்
கொடுவில்லாகியநீர்க் கோவைபெருகிவர
கணைகளாகியரத்த காசமுனிந்துவரப்
பணைசேருடைவாளானப் பக்கவிசுவுதுன்ன
அம்புறாத்தூணியென்னு மபாரணமிலங்கக்
கப்புக்கிரீடமானக பாலசூலைதுலங்க
கவசமாஞ்சகலமே கங்களெழுந்துதுள்ள
நவில்வீரகண்டாமணி நடுக்குவாதங்குலுங்க

சதுராகக்கவுரவ சயினியமிவ்வாறுவர
　　யெதிரேபாண்டவத்தானை யென்னுமவிழ்தடடை
பற்பசிந்தூரமாத்திரைப் பட்டவர்த்தனர்கோடி
　　வர்பானலேகியமா மகுடவர்த்தனர்கோடி
லேகியமானதொரு நிருபரொன்பதுகோடி
　　வாகானரசாயன மன்னவரொருகோடி
தயிலமாகியவெள்ளித் தடிகாரரொருகோடி
　　யயிலுங்கிருதமாகு மரிக்காரரொருகோடி
ரசாயனமானகெடி ராசர்களொருகோடி
　　நசியங்களினபடை ராசர்களொருகோடி
இசைநாசிகாபரண் யாதவப்படைகளும் [ளும்
　　பசைதாழ்வத்திப்புகையாம் பாஞ்சாலப்படைக
மேகநெய்ப்பாஞ்சால மித்திரப்படைகளும்
　　வாகாம்பற்றுகளான மாத்திரைப்படைகளும்
கூறுங்கலிக்கவர்க்க குந்திபோசப்படைகளும்
　　கீறுவேதுக்களானக் கேகயப்படைகளும்
நவிலுமொற்றுகளான ராக்ஷதப்படைகளும்
　　கவியரதமாகிய கல்ப்பங்கேசமாகிய
கருப்பொருள்குதிரையாங் கடியவிரேசனஞ்
　　சுருப்பப்பதாதியான சுட்டியுஞ்சூழவே
சூரணப்பேரிகையுந் தூத்தாரிக்கிருதமும்
　　சீரியகுடைகொடி செயநீர்குளிகைதுன்ன
நாந்தகச்சத்திரமும் நவில்கேடையச்சீலையு
　　மாந்தனுமத்தனமு மம்ப்விழ்தவுரையும்
அப்புருத்தூணியே யானத்திராவகமும்
　　தம்பவுடைவாளான தயிலப்பிடிப்புங்கூட
கவசப்பொடித்திமிரத்தல சேகரவுப்பைபொடனுடன்
　　வசவிரகண்டாமணியாகு மிரத்தம்வாங்கல்

இப்படியொன்றுக்கொன்றங் கெதிர்க்கின்றவேளையி
லொப்பில்சேனுபதிக ளொருவருக்கொருவர்
வாதகுன்மஞ்சாதிக்காய் வலிமையையடக்கவுஞ்
சாதிக்காய்வாதகுன்மத் தாட்டீகமடக்கவும்
அர்ச்சுனன்முன்னேசூ ரியன்பொரவங்கெதிர்த்தார்
பற்குனன்கணையாலே படுகளத்திலேமாண்டார்
சகாதேவன்கணையாலே சகுனிபுத்திரர்மாண்டார் [ன்
தகைசேர்மாருதியாற் சல்லியமித்திரன்மாண்டா
அங்கர்தேசத்துக்கெல்லா மரசன்கைச்சிலையாலே
பங்கமாயோடினனே பரிக்கெல்லாமரசன்
கிட்டினன்தோழனுங் கிட்டினன்கணையாலே
பட்டானேகேரளன் படையொடுசுதனே
பாரியசைவசாசிப் படையெனும்பெருங்காற்று
லாரியன்படையாம்பஞ் சடிபட்டுப்போச்சுதே
கதிரவன்சுதன்வடிக் கணையெனுங்காலனல்
எதிரானபாண்டவிய னிறந்துவிட்டானே
பாத்திரமானகன்னன் பாணியத்திரத்தாலே
மாத்திரேயன்சென்னி மண்ணிலேவிழுந்ததே
வாஞ்சைமித்திரன்பகன் வாளாற்பாஞ்சாலப்படை
பாஞ்சாலமித்திரன் பட்டிறந்தானே
தந்தைமேற்கடற்சென்றுன் தான்படையுடன்சென்று
பந்தானபாண்டவரும் பாடிசென்றுரே [ன்
டகன்சண்டைபார்க்கவன் றுவந்தான்கிழக்கேமித்திரன்
இகந்தானெழுந்ததங் கிருபடைகளுமே

---

## விருத்தம்.

பதினேழாநாளுதையத்திற் பானுதனையன்
றனையரசன்
முதல்வன்வேண்ட நின்பகையை முடிப்பனின்றே
யன்றேனன்
சிதைவனிதுமெய் மத்திரனைத் தேரூர்வதற்குப்
பணித்தியென
வதுசெய்திடக்கொண் டணியுடனே யடுத்தான்
சிலையை யெடுத்தானே.

---

## கண்ணிகள்-தரு-மத்தியமாவதி-அடதாளம்.

வந்துகன்னன்பது மந்தனைதேர்செய்து
மாரியெனக்கணை தொடுத்தான்
நிந்தையில்பாண்டவர் தந்திரக்கத்தனன்னிலத்
தேர்செய்துநேரிலே யடுத்தான்
திட்டத்துய்மனந்த மித்திரபுத்திரனை
தேரிலயர்ந்திடச் செய்தான்
திட்டத்துய்மன்தனை கெட்டுமுறிந்திட
சித்திரபானுமகனெய்தான்
குந்திபோசன்படை யந்தகனூரிற்
குடிபோகவேவிடை கொடுத்தான்
செந்தினகரன்சேய் பின்னுமப்பாலேமாத்
திரப்படையும்போக விடுத்தான்
தபனன்மைந்தனுலே சுபனமானராட்
சதன்படையுமாண்டு போச்சே
அச்சுவத்தாமன்கை யம்பினாற்கௌசல
னந்தரமேகவு மாச்சே

பூசுரன்சேயாலே கேகையன்கேரளன்
பூழியனுஞ்செத்துப் போனர்
காசறுபாண்டவர் தூசியெல்லாம்பெருங்
காற்றிலிலவம்பஞ் சானர்
வீமசேனனென்று மாமதகுஞ்சர
வெற்பினுக்கேயெதி ராக
பாமேயவலம்புரித் தாய்னனுசர்கள்
பன்னிரண்டுபேர்கள் போக
வந்தசுயோதனன் தம்பிமாரைக்கொன்று
மாருதத்தின்மகன் முடித்தான்
குந்தகமான துச்சாதனப்பாவியைக்
கொல்லவென்றுசபதம் பிடித்தான்
வாடாதுச்சாதன வாடாதேயோடாதே
வாவென்றுகைகளைப் பிசைந்தான்
ஆடாதநாகத்தைப் போலேதுச்சாதன
னவனும்நேரே யிசைந்தான்
ராசாதிராசனும் பூசுரன்மைந்தனு
மாரதேயனுமற்ற பேரும்
வாசவன்பிள்ளையுங் கண்ணனுமண்ணனு
மாத்திரைசுதருமெல் லாரும்
பார்க்கத்திசையெல்லா மார்க்கத்துடைதட்டிப்
பாணியொடுபாணி யடித்தார்
மார்க்குமுரத்துக்கு மலக்கிட்டொருவர்க்
கொருவரைக் கையாலெட்டி யிடித்தார்
தாளாலுந்தோளாலுங் கையாலுமெய்யாலுந்
தள்ளிதுச்சாதன னுதைத்தான்
கோளரிக்கேதனன் தப்பவிட்டுக்கையாற்
குத்ததுச்சாதனன் பதைத்தான்

குப்புறவிழுந்ததுச் சாதனனைவீமன்
பேய்ப்புலிபோல்கையா லறைந்தான்
அறைபட்டுவீழ்ந்த துச்சாதனன்மாரை
யழுத்திசுரிகையாற் குறைத்தான்
மாரைப்பிளந்தொழு ரத்தத்தைருத்திரன்போல்
வாரிக்கைகயால்வீமன் குடித்தான்
சோராதிசாரரெல் லாருங்காணமுன்பு
சொன்னசபதத்தை முடித்தான்.

---

விருத்தம்.

உயிர்த்துணை யனுசர்தொண் ணூற்
றொன்பதுபேரைக் கொன்று
செயித்தனன் வீமனுனென் செய்வனென்
றரசர்கோமான்
பயித்தியக் காரன்போலே பரதவித்
தழுதபோது
மயித்திர னைகன்னன் வசனிப்பா
னசரிபோலே.

---

தரு-கலியாணி-ஆதிதாளம்.

---

பயப்படாதேயண்ணே யினியென்கைபா
ரெனக்குநேரொருத்தரு நிற்கமாட்டார்
கொக்கரித்துத் தனஞ்செய னைநிமிஷத்திற்
கொல்லவென்று சல்லியனை
யொல்லையிற்றேர் விடென்முன்

சிங்கக் குட்டியையானை தேடிக்கொண்டுசெல்
வதுபோலவில்விசைய நல்வரவு பார்த்தான்
பண்டிதனாகிய கிட்டினன்றேராங்கை
பார்த்ததற்குப் பார்த்தனுன் மாத்திரையை நேரே
கொண்டனுபானித்து விடல்போல் விசையனைக்
குடக்கொடு வடத்திசை முடக்குள திசைகள்
தெரியாதிரதத் துடனேகொடுவந்து திடுக்கென
விடுத்தனன் நடுப்படை தனிலே.
கண்டானேமித்திரன்மகன் சல்லியனைக்
கண்ணைக்காட்டி மண்ணைக்காட்டி
விண்ணைக் காட்டிவில்லக்கை
கொண்டானேயதற்குமுன்னே தனஞ்செயன்
குறைத்தானே நிரைத்தானே
மறைத்தானே ரதத்தை
மனுவிற்கைகொண்டானே தபனன்மகன்வடிக்
கணைத்தொடுத்துமுன் னொடித்தானே தனுவை
அதுகண்டிந்திரன் மதலைசல்லியன் அங்கநெருங்க
வடுங்கணை நிறைத்தான்
அதுகண்டிரவி பருமான்கன்னன்
மெய்யாகமுநோக வனேகமாய் விடுத்தான்
இரண்டுதேரையுஞ் சாரதியிருவரும்
இசையும்நேரிசமென விசைகொடு திரித்தார்
வளிக்கணையங்கர்கோன் விட்டானருச்சுனன்
வாசுகியாசுகமே செலவிடுத்தான்
எரிக்கணைவிசையன்விட் டான்கானீனன்
வருணக்கணை கணத்தினில் விடுத்தான்
அயிந்திராத்திர மித்திரன்சேய்விட
அருச்சுனன்விரிச்சிக னுருச்சரமெடுத்தான்

அரிச்சரம்பற்குணன் விட்டான்கன்னனும்
அரிச்சரமுரித்திடத் தரிச்சதுநேரே
அப்போதுகுருச் சாபமுங்கன்னனுக்
கடைந்துதேருடைந்தது மினுடைந்தது பவமும்
பற்குணனையங்கர் பிரான்சரத்தாலே
பங்கமுமங்கமு மங்கமுன் செய்தான்
அதைசட்டைப்பண் ணும்மேலேகாண்டீப
னறுத்தனன் மறுத்தனன் கறுத்தனன் மிகவே
சல்லியன்கன் னனைப்பார்த்துநாக
சரத்தினைக்கூரத்தெடு சிரத்தினுக் கிலக்காய்
பார்த்தனுக்கேவி டென்றுன்னினைக்குப்
படியேவிடநே ரிடவொரு நொடியில்
விசையனைறிய ரதத்தைக்கீழிட
விட்டதைத்தட்டினன் விட்டுணுவானோன்
அதுதப்பிப்போய் மீளவுமேவென
அறுத்தொடுமறுத்ததை நிறுத்தினன் கன்னன்
வயித்தியனான கண்ணனினிமேல்
வடிக்கணைதொடுத்துயிர் குடித்திடிங்கிவனை
தாமசமினி வேண்டாம்புரிந்திடு
தனஞ்செயவெனுந்தொரு முனிந்தனனிகவி
தாம்பிரமுத லானபெயர்பெறு
தனிக்கணையினத்தொடு நிலைத்ததை யெடுத்து
அனுபானமந்திர மெனும்பிரையோக
வாக்கினையாக்கியே போக்கினனதுபோய்
ஆதவன்மகன் கழுத்தைக்கறுக்கென
அறுத்துயிர்பறித்தது தெறித்ததுதலையே.

விருத்தம்.

கன்னன்மடிந்தான் வீரசொர்க்கத் தையடைந்தான் வாத
குன்மமொழிந்த தினியெனவா குலத்தொ டடங்கு வினைக்கணம்போல்
மன்னர்பெருமா னழுதழுது வாதசேட்பந் தோஷித்த
தென்னமருண்டான் குந்தியும்வந் திரைந்தாள்சுதருங் கரைந்தாரே.

---

வேறு.

கண்ணனெனு மருத்துவனு நோய்வரலாரென்னுமுதற் கதையுங்கேட்டா
ரண்ணனெனவறிந்தபின்புபாண்டவரும்பாசறைசென் றமர்ந்தார் வெய்யோன்
றண்ணறலாடினன்மகனுக் கெனக்கடலின் மூழ்கினன்மேற் றளத்துக்கண்ண
லண்ணலினிச் சல்லியன்சே னாபதியென் றெல்லார்க்கு மறிவித்தானே.

கர்ண பருவம் முற்றிற்று.

---

# சல்லிய பருவம்.

---

விருத்தம்.

பதினெட்டாநாளிற் கவுரவசேனா பதிமத்திராதிபனான
பலபிணித்தொந்த மனாமத்தசாத்திய
பந்தமாரகப் பிணிதோஷமீது
முதற்படைக ளரசர்களரசனிவுளித்தாமன்றிருமாம
னறியநன்மாமனவன்படைமேலேயிசை
கிருந்தபன்மனேமுதலோர்
கதிவியபோதுசல்லியற்குணமே காட்டுதல்விதியெனப்
பிணிவர்க் கங்களும்விகாரச் சல்லிய
மெழுப்பிக் காயுமாகியகுருட்சேத்திரப்
ப்துமயூகத்தோ டடர்தலுமெதிரே பாண்டவர்
சேனையுஞ்சேனா பதியுமுன்னடர விருவர்தம்
படையும் பண்ணின ரண்ணின ரயரே.

---

தரு-சங்கராபரணம். ஆதிதாளம்.

சல்லியனான கவுரவசேனைத்
தலைவனைபாண்டவர் படைத்த
தானைக்கதிபதி யானதிட்டதுய்ம
சாதிக்காயெற்றிகல் கிடைத்த
போதயதாம்பிர சூதமெகுவெள்ளி
போற்றுசாரியமீ தட்டலை

சிந்தூரமாத்திரை லேகியமாகிய
சேனையதிர்த்தக் கடலை
தயிலரசாயன கிருதவிரேசன
சங்கிதைசூரண கலிக்க
நசியபுகைவற்றி யொற்றுபத்துவேது
நாசிகாபரண மொலிக்க
ரதகசதுரகப தாதியினத்தொடு
நால்வகைச்சேனையை யூகம்
மதுமேகபாதி வினையெலாந்தோஷித்த
வாதசேட்பத்தின்சை யோகம்
ஆனகவுரவ சேனையுடன்சண்டை
யாகிமிதிக்கிற போது
சேனைத்தலைவனும் மத்திரபூபதி
திட்டத்துய்மதுரை மீது
அத்திரமாரி சொரிந்துதுரத்தவே
முத்தக்காசுபோலே யிடைந்தான்
சத்தானநற்கே கயதளத்துக்குள்
ளேமத்தைப்போலேபூந்து கடைந்தான்
பாண்டவர்சேனை களாண்டவனைக்கூவ
மூண்டுமூண்டுவந்து மடித்தான்
பாதிமாண்டுபோன சேதியெல்லாஞ்சொல்ல
பற்குணனுங்கேட்டுத் துடித்தான்
சல்லியன்மேல்வரு மருச்சுனனையஸ்வத்
தாமப்புலிவந்து தடுத்தான்
தனஞ்செயன்முன்னிற்க மாட்டாமலச்சுவத்
தாமன்அபரத்தைக் கொடுத்தான்
தோற்றோடிப்போனபி ராமணன்மைந்தனை
தூரத்திலேவரப் பார்த்து

துன்னுசராசந்தன் தன்மகனேவந்து
தொட்டுக்கொண்டான்சண்டை யார்த்து
சாற்றுமஸ்வத் தாமனம்பினுலே
சராசந்தகுமாரனு மாண்டான்
போற்றுசிசுபால மைந்தனும்மேற்படி
பூசுரன்மைந்தன்மேல் மீண்டான்
அவனையுமேற்படி யாகத்தானேகணை
யாற்கொன்றுசேனையுங் கொன்ருன்
அத்திரசராசந்த புத்திரப்படையுமண்
ணுக்கிமலைப்போலே நின்ருன்
தம்பிசகாதேவன் வெம்பியெதிர்த்திட்ட
சகுனிமாமன்தலை யறுத்தான்
சபதமுடித்தேனென் றப்போதுஞானத்தாற்
தன்னைத்தானேமெத்த வெறுத்தான்.

---

## விருத்தம்.

இப்படி யாகத்தானே யிருபடை களும்போர் செய்ய
வொப்படி மாத்திரேய னுருமெனக் குமுறியுன்னை
யெப்படி யுங்கொல்வேனு னென்றுவெஞ் சபதம்பேசி
தப்படி யிலாத்தர்மத் தலைவனே டமர்செய்தானே.

---

## தரு-தோடி-தாள்ம்ரூபக ம்

### பல்லவி.

அடித்தானே மத்திரர் கோமகன் அறத்தின்
மகனுடைய நிறத்தி லிடியெனவே.

## அநுப்பல்லவி.

அத்திரங்களொருகோடிச் சித்திரங்களறுகோடி
யண்டருமெண்டிசைக
கண்டுமருண்டிடச் சண்டைகள்
கண்டொரு சண்டனுமண்டிட (அடி)

## சரணம்.

மடித்தானேவாயிதழ் தர்மனும்
வரித்தசிலையிலெரி விரித்தகணைகள்வெகு
வச்சிராயுதங்கள்போலே மெச்சவே
[illegible]மேலே மண்டைபிளந்திட
விண்டுநெகிழ்ந்திட வன்றிறல்
கொண்டொரு செந்தணல்போலே. (அடி)
செதித்தானேபாண்டுகு மாரனைக்குதித்துவரு
கையிலேயுதித்தகதி ரெனவெகுத்
திரமிலாதவாளாங்கத் தியையாளாவிநீளக்
குண்டல மண்டலத் துண்ட முருண்டிட
ரெண்டு கணுங்கணை கொண்டு களைந்துடன். ()
அரிந்தானேமத்திரர் கோன்றலை
யறுத்தவுடனுதிரம் நிரைத்துமெய்யிலொழுகி
யத்திலாமலேபெருகி மத்திரேசனுவிமாய
வங்கதி வங்கதி ரும்படை யெங்கு
மயங்கிட வெங்கடு நோயின மிங்கனவே வர். ()

---

## விருத்தம்.

அறத்தின்மருமான் கணைவாளா லடர்சல்
லியன்விண் ணடைந்த தற்பின்

மறத்தின்மிகுந்த வவன்படையும்
மடிந்தபிறகு மன்னர் மன்னன்
திறத்தின்மிகுந்தா ரினியிலை
சேனைக்கிறைவேண் டாமெனப்பிற்
புறத்திற்சேட்டபப் படையுடன்போர்
புரிந்தானதன்பின் பிரிந்தானே.

---

தரு-முகாரி-ஆதிதாளம்

---

கவுரவசேனையி னெச்சமெல்லாமொரு
காலனைப்போலவே தேடி
கரண்டிபன்கொல்லவே யாண்டுதொலைந்தது
கால்நாழிகைக்குள்ளே வாடி
வீமசேனனுடன் கிருதபன்மாவந்து
விளைத்தானேயற்புதச் சண்டை
வேந்தர்கள்வேந்தனுக் காந்துணையாய்வந்த
வீரியனார்பெருந் தண்டை
காதியதண்டினால் மோதியடித்தொரு
காலனைப்போலவே மடித்தான்
கண்டுகிருதபன்மா தண்டுடனேயன்று
கால்நடையாயோட்டம் பிடித்தான்
வில்லாசிரியற்கு மைத்துனரானவர்
விசையனுடன்மா விளைத்தார்
வீபற்சுதன்கணைத் தீபத்தின்முன்வந்த
விட்டிலைப்போலவே யிளைத்தார்
பின்னுமனேகவி தச்சண்டைசெய்வார்முன்
பெற்றவில்லாளிபேர் லானார்

பேசாமலப்புறம் வாயைமூடிக்கொண்டு
பித்தரைப்போலோடிப் போனுர்
மாமனுர்போக மருமகன்வந்தந்த
வாசவன்சேயொடு மலைந்தான்
வானரக்கேதனன் மாளவில்லின்கணை
மாரியினுல்நிலை குலைந்தான்
பின்னுமஸ்வத்தாமன் வெள்ளைப்பரியினுன்
தன்கணையாற்பலங் குறைந்தான்
பேய்பிடித்தாடிய பெண்பிள்ளையைப்போல
பேசாமலோடிப்போய் மறைந்தான்.

---

விருத்தம்.

செயங்கொண்ட படையுமின்றிச்
செருத்துணை யெவருமின்றிக்
கயங்கொண்ட மெய்போற்றுனே
காலினுல் நடந்துகால்போல்
வயங்கொண்ட குதிரைவிட்டு
மன்னவர் மன்னன்பின்னும்
பயங்கொண்ட சிந்தையோடும்
பழிகொண்டான் வழிகொண்டானே.

---

தரு-ஆநந்தபைரவி.தாளம்-ஆதி

ராசாதிராசனுக்கும் பொல்லாதவிதியினுல்
நடந்தோடி யொளிக்கவு மாச்சுதே
தேசாதிபர்பணியும் பாதாரவிந்தமெல்லாஞ்
சிவந்துபுண்ணுகக்கன்றிப் போச்சுதே

என்னடாலமிருந்துந் தெய்வபலம்மாத்திர
மில்லாமையாலேகேடு வந்ததே
சொன்னவார்த்தைகேளாமற் பெரியவரைநிந்தித்த
தோஷத்தினாலேகுடி நொந்ததே
என்றுதேவர்முனிவர் நின்றுசொல்லிக்கொள்ளவே
யேகியொளித்தானொரு மடுவிலே
நன்றுசெய்தவசிபோற் சுவாசபந்தனைசெய்து
நசியாதிருந்தான்புனல் நடுவிலே
வில்லாசிரியன்சேயும் கிருதபன்மாவுமந்த
வேதியன்மாதுலனுங் கூடியே
நல்லாய்லையவந்தோ மன்னர்மன்னனையினி
நாமேபார்க்கலாமென்று தேடியே
பார்க்கிறவேளையிலே நீர்க்குளிருந்துகொண்டு
பையப்பேசாமலொரு மூலையில்
ஆர்க்குந்தெரியாமலே பயத்தினாலேபயத்தி
லரவக்கொடியோன்வதிக் காலையில்
பாண்டவர்தளத்துடன் மீண்டுவந்தனைவரும்
பார்த்தொருவர்க்கொருவர் பேசுவார்
யாண்டுபோனானோபாவி மீண்டினம்வரக்காணோம்
அர்தசேடமாகாதென்று கூசுவார்
கண்ணனுந்தருமனும் வீமனும்பற்குணனும்
கற்கியனுடன் சகாதேவனும்
கண்ணனனுசனும் வீடுமகாலனுங்
காணும்படைக்கெல்லாங் கோவலனும்.

## வேறு-தரு-ஆதிதாளம்.

மன்னவர்மன்னனை யாராய்ந்துத்தேடி
மயங்கித்தியங்கிய—பின்னர்
மாருதிறுனேபோ யாராய்குவேனிந்த
மண்ணெங்குமென்றடர்—முன்னர்,
வேடரானவலைக் காரர்சிலர்வந்து
வீமனைக்கண்டொரு—வார்த்தை
கோமகர்கோமகன் போயொளித்தவிடங்
கூறினபோதுன்னிச்—சோரத்தந்த
யெல்லாருக்குஞ்சொல்லி யப்பொழுதேபடை
யீண்டச்சதாகதி—மைந்தன்
கொல்லியருனர்கள் சொல்லியதாவினிற்
கூற்றுவன்போலக்கோ—விந்தன்

கட்டளைசொற்படி நீரிலொளித்திட்ட
காதகப்பாவியை—யேசி
இட்டபோதுவெளிப் பட்டுமனந்தளர்ந்
தேங்கினின்றுன்முகங்—கூசி
கூற்றுக்கண்ணுற்பார்த்த வுயிரெனக்கவனை
கோமகர்கோமகன்—பயந்து
தோற்றியபோது தருமனுங்கண்ணனுஞ்
சொல்லின்ரேமிக—நயந்து

வீமனைமாத்திரம் நீமுனையிற்கொலில்
வேறுவழக்கிலை—யுனதே
பூமியெனச்சொல வேமனர்மன்னவன்
பூரிப்பதாயினன்—மனதே
அப்போதுமுன்தீர்த்த யாத்திரைசென்றவ
லாயுதன்தன்னுடன்—விதுரன்

இப்போதிதென்ன வந்தனரண்ணனை
யிளவலான்கள்ளச்—சதுரன்
போற்றியுரைத்தான் நடந்ததெல்லாமவன்
பூபர்கள்பூபனுக்—காக
மாற்றமுறைத்துட னேற்றினனப்போது
மத்தியத்தர்ம—மாக
சொன்னது கேளுங்க ளின்னவிடமந்தச்
சூழலிலேயிரு—வோரும்
துன்னிக்கதையமர் பின்னிட்டிடாதுசெய்
தோற்றத்திலாமது—பாரும்.

சல்லியபருவம் முற்றிற்று.

# கதா பருவம்.

---

விருத்தம்.

கதாயுத்த மத்நியத்தங்
காமபாலன் சொல்லாலே
சதாகதி மகனும்வேந்தர்
தலைவனுமிசைந்து கொண்டே
மதாசல மிரண்டுகெஞ்ச
மணிவிளைத்தேடிக் கொண்டே
நிதானமாய்ச் சேறல்போற்சென்
னிலத்தினுக் கேகினாரே.

---

தரு.

வீமசேனன்முன்னே மன்னவர்மன்னவன்
வேகமாகச்செல்ல மேகமானவண்ணான்
காமபாலன்முர
சத்துசன்பற்குணன் கனிட்டர்சேனைக்கதிபன்
சிகண்டிமு னிட்டதோர் சாத்தகியும்
ஏனைமனிதருந் தானையுஞ்சூழவே
யேகியபின்பொதுவானசூழலி
லானநிதானவி சால்மிராம
னளவைகள்சொன்னானே வீமனிக
லுளவெனவுன்னானே.
வெள்ளியம்வாதவை யுள்ளியமென்றுயுள்
வேதியர்வாகட மோதியநீதியைத்

தள்ளவொண்ணுதவை யுள்ளபடியென்னுஞ்
சாத்திரமாமெனவே சுயோதனன்
நேத்திரமாமெனவே.

நாகத்துவசனே வீமனைப்பார்த்தல
ராமனுரைத்தனனே முன்னடிப்பது
வாகுவுக்குமேனு மாகத்துக்குக்கீழும்
மன்னர்மல்லவென்றான் விவரமாய்ச்
சொன்னதுநல்லவென்றான்.

ஆலிடமும்பிரத்தி யாலிடமும்பை
சாசமுமண்டலமும் பரிவாகவே
கோலியதான மளந்திருவோர்க்குங்
கொடுத்தனன் மூத்தவனே
யிளையோன் அடுத்ததுபார்த்தனனே.

சந்திரசூரிய னிந்திரனரியர் தாபதர்யாவரு
மேபெர்துவாகவே வந்துநிறைந்திவர்
விந்தைகதர்யுத்த வண்மையைப்பார்ப்பாரே
முசலிசொ லுண்மையைத்தீர்ப்பாரே.

விருத்தம்.

மாருதியுந்துரி யோதனனுந்திரை
வாரியிரண்டென நின்றாரே
போரினெடுங்கதை மோதவெழுந்தொனி
பூதலமெங்கு மடங்காதே
காரியமும்பொரு சூதமுமுன்படர்
காதிபவனமென நின்றோட
நேரிடுபொன்றென வோரிராதண்டொடு
நீடுமலைந்தனர் சென்றாரே.

வீமனைத்துரி யோதனப்பெயர் வீரனுக்கெதி ராகவே
தீமனத்தொடு வாவெனச்செறி தேவருத்தம னேதவே,
யாமடுத்தது சூதபற்பமு மானதுற்குண மேகமு
மோமவித்தொடு தேனுமித்தென வோடிவிட்டது நோ
ய்களே.

வேறு.

இடும்பினாயகன் பெருந்திருநாயக
னெனுமிவ ரிருவோரு
முடும்பினாலறி வலியெனக்கதை
களையுரத்தொடு கரத்தேந்திக்
குடும்பியானவ னரசனுக் கேர்தியகுறளை
வார்த்தையைப் போல
யடும்பிதா பமுமறியவே கதைகளோடடுத்
தமர்தொடுத்தாரே.

தரு-மோகனம்-ஆதிதாளம்.

வீமனுக்குவலம்புரித் தாமனுக்குமொருக்காலே
விளைந்துதே கதாயுத்தம்
ராமனுரைப்படி, யடுத்தார்விடுத்தர்
நட்டநடுத்தரை யோட்டையடுத்திறை
நடித்துநேரிலே யிடித்துமாரிலே
நசுங்கியுடலமெல்லாங் கசங்கவுமுடனேநி
ராட்சதபலமெனத் தாட்சியில்லாமலிசை. (வீம)

சாரிகையிரண்டு திரும்பிவிரும்பித்
தட்டியடிக்கடி யோடியடிக்கடி

தடித்திலேயிடி யிடித்ததாமெனத்
    தளர்ந்துபடிவவுடல் பிளந்துமுளமுளெனச்
சாட்சியெவருமெனக் காட்சியீதெனவே. (வீம)

ராசராசன்தானே முந்திருந்திரத்தின
    மொற்றிடுபுத்திர னெற்றியில்
நருக்கினனது தரிக்கிலாதெனதிர்
    நடுங்கியுயிர்நிலை யொடுங்கி வருமளவில்
நாட்டமிதடாதெனவே காட்டினன்மால்விசையனை. ()

மாருதியறிந்துகொண்டு தெண்டுமெட்டவடித்துடை
    யொட்டவடித்திட மடித்து நேரினி
லடித்தபோதவன் மடிந்துவிடுவதென
    வொடிந்துவிருதுடையு மட்டமெனவே
யொழிய வாட்டமீகவேயுடலம். (வீம)

விழவுதைத்தானேமுடியில் நொடியில்
    வெட்டிமுடித்தலை யிட்டதெனக்கணை
விழிச்சுயோசனை பழிச்சுயோதனன்
    விழுந்துபுரளவுட லழிந்துபுழுதிமிசை
யீட்டுமுயிர்போமனேக வாட்டமான வேதையாக ()

பார்த்தானேபலராமன் வீமன்
    பட்டுயிர்விட்டிட நெட்டிவிரட்டிகல்
படுப்பனெனென வெடுக்கவேயலம்
    பணிந்தவனுசனொடு தணிந்திடமிகவே (வீம).

---

## விருத்தம்.

வெள்ளியமாலூரை யணக்காரிய
மித்திரராகிய பஞ்சலோகத்தோடும்
வள்ளலெனக் கராடகமாம்பாடிசேர
மார்த்தாண்டனுங்குடபால் வாரிசேர
நள்ளிருளிற் கிருபர்கிருத பன்மாதுரோண
மைந்தனனிம்மூவரும்வந் தரசர்கோன்பா
லுள்ளதெலா மறிந்தழுதா ரரசனெண்ண
முன்னினன் மறையவன்செய்பன்னினனே.

---

## தரு-மோகனு-சாப்பு.

என்னசெய்வேன் மன்னர்கோவே—இனி
யான்செய்யவேண் டியதியாவே.
என்னிடத்தி லேயப்பட்டாய்—விதி
யேதுவாலிப் படிக்கெட்டாய்
ஆனாலுமிங் கைவர்தலையை—வெட்டி
யரைநொடிக்கு ளென்சொன்னிலை
காட்டுவன்பா ரென்றமுனைந்து—கறைக்
கண்டனையப் போதுநினைந்து
வாளொன்றவ னலேபடைத்து—மயில்
வாகனன்போலுக் கிரங்கிடைத்து
பாண்டவர்மால் தம்பிநீக்கி—நிறை
பாசறைவா சலைநோக்கி
கூகைமரத் திலேகாட்டு—மிகல்
கோதறமே துவைக்கேட்டு

வாசலில்வைத் திருவரையும்—உள்ளே
மன்னிப்புகுந்து நித்திரையும்
அயர்ச்சியுமா யிருப்போரை—பார்த்தும்
அஞ்சாமற்கொல் லவன்னோரை
சிகண்டி தலையை முன்னறுத்தான்—பாக
சேனன்சேயைக் கண்டுகறுத்தான்
வாளினாலே கழுத்தறிந்தான்—சித்திர
வதைசெய்தவனை விட்டுப்பிரிந்தான்
மற்றோர்தலைகள் விழமாட்டினான்—பிண
மலையிலிரத்த வெள்ளமோட்டினான்
கரிபரிமாட் டையுமடித்தான்—அரைக்
கணத்திற்சனத்தை யெல்லாமுடித்தான்
ஐவரெங்கே வென்றுதேடினான்—பா
சறையைக்கண்டாங் குள்ளேகூடினான்
பாஞ்சாலிமக் களைக்கண்டான்—இவரே
பஞ்சவரென் றெண்ணிக்கொண்டான்
சென்னிகளை வாளால்வெட்டினான்—ரத்தஞ்
சிந்தச்சிந்த துடைதட்டினான்
அஞ்சுசேய் மெய்களும்பதைக்க—பே
யான துங்கண் டுகண்புதைக்க
அஞ்சுதலை யுங்கைதூக்கியே—போ
யரவத்துவசன் முன்னோக்கியே
பாரென்றான்பார்த் துமெய்கரிந்தான்—இது
பாதகமென் றுயிர்பிரிந்தான்
பிள்ளைகளே யிவையென்று—முனி
பெருமூச்செறிந்தனன்னின்று

## விருத்தம்.

சுயோதன னிறந்துவீர சுவர்க்கத்தை யடைந்த பின்பு
சயமிகுமிவுளித்தாமன் தவஞ்செய்யப்போனானேனோர்
வயினடைந்தனர்மாலைவர்வந்துபாசரையைக் கண்டார்
வெய்யவனு முதையஞ்செய்தான் மெல்லியள் புலம்பி
னாளே.

## தரு-வராளி.

சிகண்டியு மிறந்தானே திட்டத்துய்மனும் பட்டான்
சேனைகளு முருண்டு போச்சுதே
தகர்ந்துள் மனைபுகுந் துபிள்ளையைஞ்சையும்
வெட்டித் தலைகள்கொண்டு போகவுமாச்சுதே.
திக்கில்லாமற் போச்சுதே தெய்வமே யென்றழுத
தேவியைப் பார்த்துரைத்தான் வீமனே
மக்களைக்கொன்றவனைக்கொல்வேனவன்
வேறல்லமறைமுனி மகனஸ்வத் தாமனே
ஆனாலுமென்ன தலைகொண்டுவருகிறே
னென்றரிசேய்சென்றா னவனைத்தேடியே
போனானவன்வீமன் மேல்பிரமசிராத்
திரத்தைப்போட்டானது வருகுதாடியே
அருச்சுனன்கண்ண னுடனேபோயதற்
கதையனுப்பினானப் போததுநின்றதே
நெருப்பாயுலகை யெல்லாமெரிக்கத்
தலைப்படவேநினைந்து கொண்டொவிரண்
டுயென்றதே.

## விருத்தம்.

இவ்வா றிருக்கத் தேவரெல்லா
மிசைமாயனையும் விசையனையும்
வெவ்வே தனைதீர்த் தருள்விரென
வேண்டிக்கொளமா லுத்திரைசே
யொவ்வாக் கருவ்வயி லக்காக்கி
யுயிர்மீட் டளித்துப் படைகள்விலக்
கவ்வா ருக்கி மறையவனை யார்த்தார்
மணியைப் பேர்த்தாரே.

---

## தரு-இந்துஸ்தான்-காபி-ஆதிதாளம்.

அச்சுவத்தா மன்சிரத்தி லானசிரோ ரத்தினத்தை
வாங்கிக்கொள் வேயொளி வாங்கிப்போச்சு தப்போதே
பல்லைப்பிடுங் கிப்போட்டப் பாம்பைப்போ லுமானனே
சிரசுக்கு நிகரிந்த சீவ ரத்னமென்று
கவலைத்துரோபதைக்குக் கண்ணன்காண்பித்துரைத்தா
ஆசான் மகனுமாகி யந்தணனு மாகையாலே [ன்
நீசீவ னுடனேபோராய் நினையென் றனுப்பிவிட்டார்

---

## விருத்தம்.

பின்புபாண் டவரைமாயன்
பெரியதாய் தந்தையேனோர்
முன்புகொண் டேகியன்னோர்
முனிவரப் பணிவித் தாங்கே

வன்புற மாய்ந்தோர் மெய்யை
வன்னியா லடலையாக்கித்
தென்புலக் கடனுங் கையாற்
செய்வித்தா னுய்வித்தானே.

வே று.

காரியக் கண்ணன்தன் மதலையான
கரும்பொன்னுக் கடலைமுதன் முன்னுமோலி
சேரவளித் திரதமெனும் வீமசேனன்
செம்பான விசையனெகு நகுலன்வெள்ளி
சாரனுச் சாதேவன் கெந்தகப்பாஞ்
சாலியுடன் வாழ்ந்திருக்கத் தயிலமான
வீரசிம்மா சனமளித்த னதிலேயேறி
வீரினர் மனக்கவலை யாறினரே.

கதாபர்வம் முற்றிற்று.

---

## வாழி விருத்தம்.

---

வாழிகண்ணன் ருக்மணி
வாழிதருமன் முதலைவர்
வாழிமணத்துப் பாஞ்சாலி
வாழியமைச்சர் முதற்பெரியோர்
வாழியிந்நூ லினைப்படிப்போர்
வாழியிதனைத் தினங்கேட்போர்
வாழியிதனை மிகவியப்போர்
வாழியடியேனும் வாழியவே.

---

தரு-சோபனம்-சாப்பு-ஆநந்தபைரவி.

---

சோபன பாண்டித சோபனம்

தாபன நாடிவ்ங்க்த் தலைமையாங் கண்ணனுக்கு
பூபதியயுத்தர்ம பூபனுக்கு (சோ)
சூதமா மாருதிக்குத் துன்னும்வடிப் பார்த்தனுக்கு ()
எகுவான நகுலனுக்கு இரசித சகதேவனுக்கு (சோ)
தேவியு ரமான மாதேவி பாஞ்சாலிக்கு
சோபனமே நித்திய சோபனமே.

---

மங்களமே ஜெய மங்களமே.

---

எங்கள் பவனகிஷ்ண சாமிக்கு மங்களம்
இலக்குமி யானசத்திய பாமிக்கு மங்களம்
பாண்டவருடனே பாஞ்சாலிக்கு மங்களம்
பண்டிதசிட்சையான சொலிக்கு மங்களம்

மருத்துப்பாரதம் முற்றிற்று.